# பொங்கல் மலர்




## ஜப்பான் வாழ் தமிழ் மக்களின்
## பொங்கல் விழா மலர்




**THE SOLUTION**

# sovablu

**AI-Driven No-Code DX Platform**

aws PARTNER

aws Qualified Software

powered by aws



www.sovablu.com

## தெய்வா யுகத்தின் ஏழாம் ஆண்டு 2025.

## வணக்கம். இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

*ஜப்பானில் பொங்கலையொத்த பண்டிகையாக கொஷோகாத்சு (小正月) கொண்டாடப் படுவது பற்றி நாம் எல்லோரும் அறிந்ததுதான். புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் முடிந்த ஜனவரி மாத நடுவில் பதினைந்தாம் தேதியில் கொஷோகாத்சு கொண்டாடப்படுகிறது. அன்றைய நாளின் உணவாக அஸூகிகயு (小豆粥) என்று சொல்லப்படுகிற அரிசி, சிறு பருப்பு வேக வைத்த கஞ்சியை உட்கொள்கிறார்கள் . உப்போடு(வெண்பொங்கல் போல?) அல்லது சர்க்கரையோடு(சர்க்கரைப் பொங்கல் போல?) சாப்பிடுவது ஜப்பானியர்களின் வழக்கம். தேவையற்ற பழைய குப்பைகளைக் கொளுத்தும் தொந்தோயாக்கி(どんど焼き) என்ற பெயரில் போகியும் உடன் கொண்டாடப்படுகிறது. இவ்வகைப் பண்டிகைகள் எப்படிப் பற்பல நாகரிகங்களிலும் தன்னிச்சையாக ஆனால் ஒத்த விதத்தில் உருவாகி வந்துள்ளன என்பதை அறியும் போது வியப்பளிக்கிறது.*

*ஈராயிரம் ஆண்டுகளாக தமிழர்கள் இந்தத்திருநாளைக் கொண்டாடி வருகிறோம் என்ற தொன்மையை கலித்தொகையிலும் நற்றிணையிலும் காண்கின்றோம். சங்க இலக்கியம் என்கிற மென்பொருள் காட்டுகின்ற ஒரு குடிமைச்சமூகத்தை தொல்லியல் ஆய்வுகள் என்கிற வன்பொருள் சான்றுகள் வழியாக நிலைநிறுத்த முடியவில்லை என்ற ஏக்கத்தை கீழடி துவங்கி மயிலாடும்பாறை, சிவகளை முதலிய தொல்லியல் களங்கள் தீர்த்து வைக்கத் துவங்கியுள்ளன. இந்திய வரலாற்றின் ஒற்றைத்தன்மையுடன் கூடிய விளக்கங்களை கேள்விக்குள்ளாக்குகின்ற இந்த ஆய்வுகள் தமிழரின் தொன்மை குறித்த ஒரு முழுமையான தெளிவான சித்திரத்தை உருவாக்கித்தரும் என்று நம்புகிறோம்.*

*மக்கள்தொகை வாரியான தலைப்பத்து நாடுகளில் சீனா, பிரேசில் தவிர்த்த எட்டு நாடுகளில் கடந்த ஆண்டு பொதுத் தேர்தல் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலுமே ஆளும்கட்சி தோல்வியடைந்து ஆட்சியை அல்லது அறுதிப் பெரும்பான்மையை இழந்திருக்கிறது. எதிர்க்கட்சிகள் வலுவாக ஒன்றுபட்டு நின்ற இடங்களில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. ஓரணியாக நில்லாமல் எதிர்க்கட்சிகள் சிதறுண்ட நாடுகளிலும் கூட, குறிப்பாக இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளில் பெரும்பான்மை ஆதரவை மீண்டும் பெற முடியாமல் ஆளும் கட்சி வெளியாதரவுடன் ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் மீதான தங்கள் அதிருப்தியை வாக்குச்சீட்டுகளின் மூலம் மக்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இது மக்களாட்சியின் வெற்றி என்றுதான் கூற வேண்டும்.*

*மோஷித்தோரா, ஹோபோத்தோரா, கக்குத்தோரா என்று ஜப்பானியர்கள் புலி வருது புலி வருது என்பது பயந்து கொண்டிருந்த புலி வந்தே விட்டது.. ஜனவரி இருபதாம் தேதி பதவியேற்ற உடனே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வருகின்ற (நான்கு) ஆண்டுகளுக்கு முன்மாதிரி என்று அமெரிக்கர்கள் மட்டுமல்ல உலக மக்கள் அனைவரும் பதட்டம் அடைந்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதி வரை உலகத்தை பீடித்திருந்த ஏகாதிபத்திய நோய் மீண்டும் தலைதூக்கி பனாமா, கிரீன்லாந்து என்று அதன் கரங்கள் நீண்டு விடுமோ என்ற ஒரு அச்சமிக்க சூழல் உருவாக்கியிருக்கிறது.*

*ஏற்கனவே பெருந்தொற்று, போர்கள், இயற்கைப் பேரழிவு என்று கடந்த ஐந்து ஆண்டுகளாக சொல்லொணாத் துயர்கள் மக்களை நிலைகுலைய வைத்துள்ளன. இடுக்கண் வருங்கால் நகுக என்ற வள்ளுவன் வாக்கை மனதில் இருத்திக்கொண்டு அனைத்து இடர்களையும் எதிர்கொண்டு சோர்வுறாமல் ஒளிமயமான எதிர்காலம் பற்றிய நம்பிக்கையோடு இந்த ஆண்டை வரவேற்போம்.*

*வழமை போலவே இந்த இதழும் உங்கள் படைப்புத்திறனை பறை சாற்றும் விதமாக பற்பல படைப்புகளைத் தாங்கிவருகிறது. பொங்கல் மலரின் இருபதாவது இதழுக்குப் பங்களித்து உதவிய அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றிகள்.*



# அன்பிற்குரிய தோக்கியோ ..

*அலைகடல் கடந்தும், கலையுள்ளம், அருந்தமிழுள்ளம்*
*தாங்கிநிற்கும், சக கலையுறவுகள் அனைவருக்கும்*
*அமீரகப் பாலை நிலப் பகலவன் -*
*தமிழ்மாலை தனைச் சூட்டிச் சொல்லும்*
*பொன்மாலைப் பொழுதின் நல்வணக்கம்.*
*ஆலைத் தொழில் நுட்பம் இணைக்க நின்ற,*
*கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் அங்கே...*
*பாலைநிலம் நனைக்க வந்த,*
*கலைக்காவிரி, பொருணை நதிகளும் இங்கே...*
*இது சகோதரச் சங்கமம்...*
*Land of Shining sun wishes - The land of Raising Sun*

*COVID - லாக்டவுன் காலத்தில்* **பொன் மாலைப்பொழுது துபாய்** *நடத்திய உலகளாவிய இணைய நிகழ்வில்* **தோக்கியோ** *குறித்து டோக்கியோ தமிழ் சங்க நண்பர்களுக்கு நன்றியறிவித்த நட்பின் கவிதை*

**உடன் பிறப்புகள் உங்களிடம் சில கேள்விகள்.**
பொருள் நாடி, திரவியம் தேடி
எங்கு சென்றாலும்... நீங்கள் சுமப்பது தமிழன்பை மனதில் **தூக்கியோ?**
மகிழ்வாக வாழ்வது கலையால் உங்கள் களைப்பை **நீக்கியோ?**
மனிதம் மட்டும் மனதில் **தேக்கியோ?**
உங்கள் வளர்ச்சியின் இலக்கு அந்த வானத்தை **நோக்கியோ?**
வணக்கம் ... வந்தனம்... எனதன்பு ***Tokyo.***
***Tokyo***
**நீ** தொழில் நுட்பத்தின் **தாய்வீடா**?
உலகப் பெருநகர்கள் ஏதும் உனக்கு **ஈடா?**
அதனாலோ உனது வரலாற்றுப் **பெயர் *Edo***
நேர்த்தி – நேர்மை, ஒழுக்கம்- ஒற்றுமை, மதிநுட்பம்- மனத்திட்பம்
**- கற்றுணர்ந்து கொள்ள, உற்றறிந்து வெல்ல,**
**உலகிற்கு நற்பாடம் சொல்ல**
பிறந்தது இந்த ***JAPAN …***சிறந்தது இந்த ***JAPAN***
சொல்கிறது... "கண்ணா... எனக்கு இன்னொரு பேர் இருக்கு" ***- NIPPON"***
உலகப் பெரும் **போரா?**
உலுக்கும் நில **அதிர்வா?...**
ஊழியை ஒத்ததொரு ஆழிப் **பேரலையா??... எரிமலையா??....**
அத்தனையும் இழந்தாலும் தன்னிலை **தப்பான்...**
அழுதரற்றி குறையேதும் **செப்பான்...**
அனுபவத்தால் தினம் பாடம் **கற்பான்...**
வெற்பெனவே விரைந்தெழுந்து **நிப்பான்...*NIPPON***
இது... சுமக்கும் உடலுக்கு, உயிரின் கைகுலுக்கல்.
உலக வாகனங்களில் பெரும்பான்மை உமது...
இயங்கும் எரிபொருள் எமது...
எனவே இது,
**உலகைச் சுமக்கும் உடலுக்கும்,**
**இயக்கும் உயிருக்குமான அன்பான கைக்குலுக்கல்**...

தொலை தூரம் வந்து தமிழைச் **சேர்த்தமைக்கும்,**
தமிழ்க்கலையை கலையால் நாட்டை **ஈர்த்தமைக்கும்**
வாழ்த்துகள்... வணக்கங்கள்...





*சசி குமார் கடலூரில் வளர்ந்த நெல்லைக்காரர். இருபதாண்டுகளுக்கும் மேலாக அமீரகத்தில் வசிக்கிறார். அருமை மனைவி மீனா, அருந்தவப்புதல்வன் அரவிந்த் பாரதியுடன் பொன்மாலைப் பொழுது மற்றும் தோக்கியோ தமிழ்ச் சங்கத்தின் இலக்கியத் தூணாக விளங்குபவர்..* ***மெல்லச்சிறகசைத்து.. (பயண நூல்), எழினி (குறுநாடகத் தொகுப்பு)*** *என்கிற இரு நூல்களின் ஆசிரியர். துபாய் மின்சாரம் மற்றும் நீர் ஆணையத்தில் (DEWA), முதுநிலைப் பொறியாளராக, திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு பணி.*

# அமீரகத்திலிருந்து நாங்கள்.

சசி S குமார்

*இத்தனை அபிமானமா? இத்தனை அன்பா?*
*உதாரணம்*
***"ஹிதேத்தோஷி யாஸூதா" – "நீ... சுனாமியில் அணையாத நெருப்புடா!"***
====
வரியில்லாப் பொருளை வாங்குவதில் யாருக்குத் தான் ஆர்வமில்லை
***ஆச்சர்யம்!?!***
ஒரு வரியில்லாப் பொருளை வாங்குவதில் மட்டும் யாருக்கும் ஆர்வமில்லை.
***"Made in Japan"*** *என்ற ஒரு வரி இல்லாத பொருட்களை*
*வாங்குவதில் எவருக்கும் ஆர்வமில்லை.*
====
**வாமனன்** ஆனாலும் வான் வரை -- எழுந்து நின்றவை இரண்டு
எழுசீர் தமிழ்க் குறள், குறள்- பெற்ற குழந்தை போல்,,, ஹைக்கூ...
மூன்றே வரிகளில் – சொற்திறம் காட்டும் சித்திரம்.

---

***இப்படிச் சொல்லலாம் ஜப்பானின் சாதனையை -***

- எழுபதுகளில் எழுதப் பேனா...
- எண்பதுகளில் எழுந்து நின்ற டேப்ரிகார்டர், கேஸட்
- தொண்ணூறுகளில் கேட்டு மகிழ்ந்த, சோனி வாக்மேன்...
- தட்டிக்கணித்த **Casio ,** ஓட்டித்திரிந்த **Yamaha, Kawasaki**
- இரண்டாயிரத்தில் அலுவல் மேசை, மடிகளில் அமர்ந்த **Toshiba, Fujitsu...**
- சாலைகளில் நகர்ந்த **Toyota, Nissan, Honda, Mitsubishi...**

அத்தனையும் அத்தனையும் ***Japan ... Japan ...***
**அகிரா குரசோவா... தகேஷி கித்தானொ**... என இயக்குநர்
பாதிப்பில் இருந்து எந்தக் கலைஞனும் **தப்பான்...**
ஆயிரம் திறமைகள், லட்சத்தில் பெருமைகள்
பசிபிக் சமுத்திரமாக , உங்கள் தேசத்தில் குவிந்து கிடக்க,
**மகிழ்ந்து கிடந்த உலகு, -- உன்னைக்கண்டு**
**நெகிழ்ந்த கணமொன்று உண்டு...**
***2011... நில அதிர்வு; ஆழிப்பேரலை. அணுவுலைகள் கதிர்வீச்சு...***
**மூன்றும் ஒன்றாய் சேர்ந்து தாக்க,**
***Fukushima...***
அணுஉலைகள் கதிர்வீச்சு ... வசிப்பிடங்களை விட்டு வந்த மக்கள்...
மரணம் தொடும் தொலைவில்... எனினும்
மனிதம் காத்த மனிதர்கள்...
வன்முறையில்லை... வரம்பு மீறலில்லை...
குரல்கள் உயர்த்தவில்லை... குற்றங்கள் ஏதுமில்லை....
குணத்தில் மாற்றமில்லை...
வாழ்வின் மாண்புதனை
வணங்கிக் கற்றது இவ்வுலகம்
இணங்கிச் சொல்வோம்,

**இத்தனைத் தெளிவும், இத்தனை அன்பும்,**
**இத்தனை நேசமும், இத்தனை நேர்மையும்,**
**இத்தனை ஒழுக்கமும், இத்தனைப் பெருமையும்,**
**இத்தனைப் பொறுமையும், இத்தனை தகைமையும்**
**இத்தனைத் தன்மையும், இத்தனை உண்மையும்,**
**உணர்வாகக் கொண்ட ஜப்பான்...**
**இன்னும் ஒரு முறை சொல்வேன் -இவன்**
**உலகில் என்றென்றும் உயர்ந்து**
**நிற்பான்.**





Ambika
BRINGING INDIA CLOSER
WISHES YOU ALL
A PONGAL FILLED WITH
THE AROMA OF SUCCESS.
HAPPY
Pongal
300+ PRODUCTS
SELECT BASMATI RICE
25 YEARS
SINCE 1998 IN JAPAN
Marketed in Japan by
Ambika Corporation
www.ambikajapan.com










**ADACHI-CHUO HONCHO**

**MINAMI-KASAI II**

**NISHIARAI-HONCHO II**




- ☑ Solar panels
- ☑ Storage battery

**Details**
**Coming soon...**




人類の共同財産を創出する。

Agr 1:√2

アグレ都市デザイン株式会社
Agratio urban design Inc.

## Housing Business
Design, construction, and sale of newly built single-family homes
(in-house sales / consignment sales)

## Asset solution Business
Land purchasing, profitable real estate sales,Sales, management and operation of compact condominiums, sales of wooden apartments, asset consulting

## Accommodation Business
Support for opening accommodations Consulting and operational management

Tokyo Stock Exchange Standard Market, Stock Code: 3467

# Quantum Computing, ANI, AGI, ASI and Beyond

## Dr. T. Jeevanandam

When you hear the word “quantum” your first thought might conjure up images of science fiction or intricate physics concepts. But quantum computing, though rooted in fascinating science, is no longer a distant dream—it’s becoming a reality, and its impact could transform the way we solve some of humanity’s greatest challenges.

---

### What Is Quantum Computing?

To understand quantum computing, let’s first revisit what a computer does. Traditional computers, like the one you may use to check emails or create spreadsheets, process information in binary: 0s and 1s. These binary units, called bits, are the foundation of how your computer stores and processes data.

Quantum computers, on the other hand, use quantum bits, or qubits, which can exist as 0, 1, or a combination of both—this is known as superposition. Imagine flipping a coin: while it’s in the air, it exhibits the potential to be either heads, tails, or a combination of both. Similarly, qubits operate probabilistically, enabling quantum computers to process a massive number of possibilities simultaneously.

---

### Why Does This Matter?

For tasks like typing a document or browsing the web, traditional computers are more than enough. But for complex problems—such as discovering new medicines, optimizing supply chains, or modeling climate changes—traditional computers struggle. This is because they must work through every possible solution step by step, a process that can take years or even century.

Quantum computers, with their unique properties like **entanglement** (where qubits are interconnected even when separated by great distances), can perform these tasks exponentially faster. For specific types of problems that exploit quantum algorithms, solutions that would take today’s supercomputers thousands of years might be completed in minutes.

.



Dr. T Jeevanandam, a native of Pollachi came to Tokyo in 1987. Working as Technology Consultant now! From serving as the editor of ICAT (Indian Community Activities in Tokyo) to leading the coordination of Pongal for the last 33 years, Jeeva-san has been very active in the Indian diaspora in Tokyo. He has regularaly contributed to Pongal Malar on technology topics.

## Real-World Applications

1. **Healthcare**: Quantum computers could revolutionize drug discovery by simulating molecular interactions with unmatched speed and accuracy. This could accelerate the development of cures for diseases like cancer and Alzheimer's.
2. **Finance**: From fraud detection to optimizing investment portfolios, quantum computing could make financial systems more secure and efficient.
3. **Climate Modeling**: Simulating Earth's climate is extraordinarily complex. Quantum computers could provide more accurate models, helping us tackle issues like global warming.

---

## How Close Are We?

While quantum computers are still in their infancy, companies like IBM, Google, and Microsoft are making rapid strides. In 2019, Google announced it had achieved **quantum supremacy**, solving a specific problem beyond the reach of traditional computers. For example, Google's Sycamore processor performed a calculation in 200 seconds that would take the most advanced Supercomputer approximately 10,000 years.

However, practical quantum computers are still a few years away from being widely used. Progress continues with innovations in hardware, algorithms, and integration with existing technologies.

---

## Beyond Quantum Computing

The possibilities don't stop at quantum computing. Emerging technologies like **artificial intelligence (AI)** and **neural interfaces** are also shaping the future. AI already powers virtual assistants like Siri and predicts what you'll search on Google. Coupled with quantum computing, AI could become even more powerful, tackling problems we can't yet imagine.

### IBM Quantum Heron

IBM has been at the forefront of quantum advancements, unveiling some of the most advanced quantum computers to date. In November 2024, IBM announced hardware and software advancements enabling the execution of complex algorithms with unprecedented scale, speed, and accuracy. This includes the IBM Quantum System Two, which began operation with three IBM Heron processors—marking a significant step toward quantum-centric supercomputing.

**Google's latest quantum chip, Willow**, announced on December 9, 2024, is unlikely to appear in consumer products anytime soon. But researchers say it's a major breakthrough in the field of quantum computing. Google says the chip will solve a 30-year-old challenge: reducing the errors that occur during the operation of quantum computers.

**NVIDIA Contributions**

NVIDIA is also making strides in the quantum computing arena. In November 2024, NVIDIA partnered with various organizations to accelerate quantum breakthroughs by integrating quantum hardware with AI supercomputing. This approach aims to transform current quantum processors into more practical quantum computing devices.

---

## Types of AI that are likely to Be Used in Quantum Machines

The terminologies **Artificial Narrow Intelligence (ANI)**, **Artificial General Intelligence (AGI)**, and **Artificial Super Intelligence (ASI)** describe different levels of AI capability:

1. **Artificial Narrow Intelligence (ANI):**
    - **Definition:** ANI, also called Weak AI, refers to AI systems designed for specific tasks or a narrow range of tasks. They excel in their domain but lack adaptability outside their predefined scope.
    - **Capabilities:** ANI cannot think, reason, or adapt beyond its programming.
    - **Examples:**
        - Virtual assistants like Siri, Alexa, and ChatGPT.
        - Recommendation systems (e.g., Netflix or Spotify).
        - Autonomous vehicles.
        - Medical diagnosis systems for specific conditions.

2. **Artificial General Intelligence (AGI):**
    - **Definition:** AGI, also called Strong AI, refers to AI systems with the ability to understand, learn, and perform any intellectual task a human can.
    - **Capabilities:**
        - Adaptable across various tasks without extensive retraining.
        - Able to think, reason, and apply knowledge across different contexts.
        - Learn and improve autonomously, even in unfamiliar domains.
    - **Status:** Currently hypothetical. AGI remains a major goal in AI research.

3. **Artificial Super Intelligence (ASI):**
    - **Definition:** ASI refers to a level of intelligence that surpasses human intelligence in all aspects, including creativity, problem-solving, and emotional intelligence.
    - **Capabilities:**
        - Far superior to human intelligence in every domain.

    - Potential to design better systems and solve problems beyond human comprehension.
  - **Status:** Entirely theoretical at this point. Achieving ASI raises significant ethical concerns, such as the risk of losing control over these systems.

---

## Simple QC Architecture




## Conclusion

Quantum computing and AI represent a future that will drastically change the way we live and interact with technology. While **Artificial General Intelligence (AGI)** and **Artificial Super Intelligence (ASI)** remain aspirational, the potential for breakthroughs is immense. The transition from ANI to AGI and eventually to ASI involves overcoming significant technical and ethical challenges. As we embrace this technological revolution, understanding its fundamentals empowers us to contribute responsibly to its development.

**Quantum computing won't replace our everyday laptop or smartphone anytime soon, but its breakthroughs will indirectly enhance our life—through better healthcare, smarter technologies, and a more sustainable planet.**

The journey from binary to qubits has brought us into a new dimension of possibility, one where humanity's greatest challenges might finally meet their solutions.




AUTHENTIC SOUTH INDIAN CUISINE

# Thanjai Meals

Hatagaya Shibuya, Tokyo

Tel: 03-5352-8055

Kyodo, Setagaya, Tokyo

Tel: 03-3429-8810

THANJAI MEALS
BEST SOUTH INDIAN FOODS

Dine in / Take out / Private party / Catering




資源開発

204 Judicial Scrivener Joint Office 1-16-5, Chuo, Edogawa-ku, Tokyo 132-0021

toll-free call：0800-805-1404

Name of person-in-Charge：

# பாரதி விழா &
# உலக அறிவியல் நாள் 2024

**ச. கமலக்கண்ணன்**

*2023ம் ஆண்டு தோக்கியோ மாநகரில் மிகுந்த வரவேற்புடன் பாரதி விழாவை நடத்தி முடித்த மக்கள் சிந்தனைப் பேரவையின் ஜப்பான் கிளை இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. இடையில் ஏப்ரல் மாதத்தில் உலகப் புத்தக நாளைக் கொண்டாட எண்ணியிருந்தாலும் மிகுந்த பணிச்சுமை காரணமாக இயலாமல் போயிற்று. 2025ல் நடத்தத் திட்டமிட்டு வருகிறது. துவக்க விழாவின்போது, ஜப்பான்வாழ் தமிழர்களுக்கு ஏற்ற நிகழ்வுகளாகப் பேரவை தீட்டிய நீண்டகாலச் செயல்திட்டத்தின் ஓர் அங்கமான அறிவியல் நாளை இந்த ஆண்டு கொண்டாட முடிவு செய்தது. பேரவையின் தலைமைக் கிளை ஆண்டுதோறும் ஈரோட்டில் பிப்ரவரி 28ம் தேதி சிறந்த அறிவியலாளர்களை அழைத்து மாணவர்களுக்குப் பயனுள்ள வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.*

*ஜப்பானிலும் தேசிய அறிவியல் நாளைக் கொண்டாடலாம் என்று எண்ணியபோது இந்தியாவின் அறிவியல் நாளான பிப்ரவரி 28ஐக் காட்டிலும் ஜப்பானின் அறிவியல் நாளைக் கொண்டாடினால் பொருத்தமாக இருக்கும் என்றெண்ணினோம். ஆனால் ஜப்பானுக்கென்று தனியாக அதிகாரபூர்வமான அறிவியல் நாள் இல்லை. 2024ஆம் ஆண்டு அக்டோபர் 5ஆம் நாள் ஆஸ்திரியாவிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களும் இணைந்து வியன்னா தொழில்நுட்பப் பல்கலையில் அந்நாட்டுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான அறிவியல் உறவை "ஜப்பானிய அறிவியல் நாள் 2024" என்ற பெயரில் கொண்டாடினார்கள். அதிகாரபூர்வமான அறிவியல் நாள் இல்லாத நிலையில் உலக அறிவியல் நாளை ஜப்பானில் கொண்டாடுவது எனப் பேரவை முடிவு செய்தது. அது நவம்பர் 10ம் நாள் ஆகும்.*

*டிசம்பர் 11ம் தேதி பாரதி விழாவுக்கான நாள். ஒருமாத இடைவெளியில் இரண்டு சிறு நிகழ்வுகளை நடத்துவதைவிட இரண்டையும் இணைத்து ஒரு பெருவிழாவாக நடத்தத் திட்டமிட்டது. இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு வார இறுதிக்காக அரங்கைத் தேடியபோது நட்சத்திர விடுதிகளின் கொண்டாட்ட அரங்குகளுக்கு இணையான கட்டமைப்பைக் கொண்ட ஃபுனாபொரி டவர் ஹாலின் இரண்டாம் தள அரங்குகளில் ஒன்று நவம்பர் 30ஆம் தேதி கிடைத்தது. முந்தைய பாரதிவிழாவுக்குக் குறைவான பார்வையாளர்களை எதிர்பார்த்திருந்து எதிர்பாராத திரளான வருகையால் திக்குமுக்காடிப் போன அனுபவத்தைக் கருத்தில் கொண்டு சுமார் 200 பேர் அமரும் ஜுய்-உன் அரங்கு முன்பதிவு செய்யப்பட்டது.*



*திரு. ச. கமலக்கண்ணன், வரலாற்றிலும் இலக்கியத்திலும் மொழியியலிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். 2004ம் ஆண்டு முதல் வரலாறு டாட் காம் [www.varalaaru.com] என்ற மின்னிதழை நடத்தி வருகிறார். தமிழ்-ஜப்பானிய மொழிகளுக்கிடையேயான இலக்கண ஒப்புமைகளை ஆராய்ந்து வருகிறார். வெளிநாடுவாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் [NRTIA] ஜப்பான் கிளையின் துணைப்பொறுப்பாளர்,மற்றும் மக்கள் சிந்தனைப் பேரவை ஜப்பான் கிளையின் ஆலோசகர்.*

அடுத்ததாகச் சிறப்பு விருந்தினர்களைத் தேர்வு செய்யவேண்டும். பேரவையின் தலைமைக் கிளை ஆண்டுதோறும் ஒரு தமிழறிஞரைத் தேர்வு செய்து ஈரோடு பாரதிவிழாவில் சிறப்பித்து வருகிறது. அந்த வகையில் 2022ம் ஆண்டு ஈரோட்டில் சிறப்பிக்கப்பட்டவர் பாரதியியல் அறிஞர் பேராசிரியர் ய. மணிகண்டன் அவர்கள். அவரைச் சிறப்பு விருந்தினராக ஜப்பானுக்கு அழைக்க முடிவுசெய்து தொடர்புகொண்டபோது மகிழ்வுடன் ஒப்புக்கொண்டார். இந்திய மருத்துவ மன்றத்தின் திருச்சிராப்பள்ளி கிளை ஆண்டுதோறும் பொங்கல்விழாவை நடத்தி வருகிறது. அதில் ஒரு தமிழறிஞருக்குச் சிறந்த தமிழறிஞர் விருதையும் அளித்து வருகிறது. 2024ம் ஆண்டுக்கான சிறந்த தமிழறிஞர் விருதைப் பெற்றவர் இவரே. இவ்விரண்டு நிகழ்வுகளின் வழியே இவரது பாரதியியல் ஆய்வுகளையும் யாப்பிலக்கணப் புலமையையும் செவியுற்றிருந்த பேரவையினருக்கு இவரது ஒப்புகை பெருமகிழ்வைத் தந்தது.

2024ம் ஆண்டு பேரவையின் வெள்ளிவிழா ஆண்டு. ஜூன் மாதத்தில் இருநாட்கள் ஈரோடு கொங்கு கலையரங்கில் பல்வேறு ஆளுமைகள் சூழ அறிவுத் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. 25 ஆண்டுகாலப் பணிகளை விளக்கும் காட்சிக்கூடம், 25 விழுக்காடு கழிவுடன் நூல்கள் விற்பனை, பல்வேறு நிகழ்வுகளில் உடனிருந்து சிறப்பித்த ஆளுமைகளின் உரைகள், 25 எழுத்தாளர்களுக்குப் பாராட்டு, அயலகத் தமிழ் ஆளுமைகளின் அறிமுகம் எனப் பேரவையின் பரிணாமத்தின் அனைத்துப் பரிமாணங்களையும் காட்டுவதாக அமைந்தது. அதில்தான் ஜப்பான் கிளை நிர்வாகிகளுக்கு அறிவியலாளர் முனைவர் மயில்சாமி அண்ணாதுரை அவர்களை நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது ஜப்பானுக்கு ஒரு பொருத்தமான நிகழ்வுக்கு அழைக்க விரும்புவதாகக் கூறியபோது நிகழ்ச்சி உறுதியானபின் தெரிவியுங்கள் என்றார். உலக அறிவியல் நாளுக்கான சிறப்பு விருந்தினராக அழைக்க முற்றிலும் தகுதியானவர் என்று முடிவுசெய்து தொடர்புகொண்டபோது அமெரிக்கச் சுற்றுப்பயணத்தில் இருந்தார். இடையறாத நிகழ்ச்சிகளுக்கு நடுவிலும் தொலைபேசி அழைப்புகளுக்கும் மின்னஞ்சல்களுக்கும் உரிய பதிலளித்து வருகையை உறுதிசெய்தார்.

நாளும் நேரமும் சிறப்பு விருந்தினர்களும் முடிவானபின் நிகழ்ச்சி நிரலின் நிகழ்வுகள் ஒவ்வொன்றாக வடிவம் பெறத்தொடங்கியது. முந்தைய பாரதிவிழாவில் குழந்தைகளின் பங்கேற்பு இருந்தது. ஆனால் இந்த ஆண்டு இரு சிறப்பு விருந்தினர்கள் இருப்பதால் நேரத்தின் அருமை கருதிக் குழந்தைகள் பங்கேற்ற "பாரதி ஊர்வலம்" ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பங்கேற்கக் குழந்தைகளைத் தேர்வு செய்து ஊர்வலம் தொடங்கும் இடமும் வழித்தடமும் திட்டமிடப்பட்டன. ஈரோட்டில் பாரதி ஊர்வலத்தில் ஜோதி ஏற்றப்பட்டு அரங்குக்குக் கொண்டுவரப்படும். ஆனால் தோக்கியோ நகரத் தெருக்களில் நெருப்புக்கு அனுமதி இல்லையாதலால் அதற்குப் பதிலாகப் பாரதியின் புகைப்படத்தை ஏந்திவர முடிவு செய்யப்பட்டது.



ஜப்பானில் பாரதி பற்றி உரையாற்றுவதற்காகப் பேராசிரியர் அவர்கள் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தபோது ஒரு யோசனை தோன்றியது. பாரதி ஜப்பானைப் பற்றி ஏராளமான தகவல்களைத் தனது கட்டுரைகளிலும் தலையங்கங்களிலும் எழுதியிருந்தார். அவற்றைப் படிக்கப் படிக்க மலைத்துப்போய் ஒரு நூலே எழுதிவிடுமளவுக்குத் தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றனவே என்று எண்ணி அவற்றை நூலாக்கவும் முனைந்தார். அவ்வாறு உருவானதுதான் "**பாரதியும் ஜப்பானும்**" என்னும் நூல். அதன் வெளியீடும் ஜப்பான் மண்ணில் நடந்தால்தான் பொருத்தமாக இருக்கும் என்று நூல் வெளியீடும் நிகழ்ச்சி நிரலில் இணைக்கப்பட்டது.

அறிவியலுக்காக நடத்தப்படும் நிகழ்வில் அறிவியலாளர்கள்தானே நாயகர்கள்? எனவே, அறிவியலுக்குப் பங்களித்துவரும் ஜப்பான்வாழ் தமிழ் அறிவியலாளர்களுக்குச் சிறப்புச் செய்யப் பேரவை முடிவு செய்தது. தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்து தம் கடின உழைப்பால் அறிவியலில் முனைவர் பட்டம் பெற்று இன்று அறிவியல் தொழில்நுட்பத்தில் மகத்தான வளர்ச்சி பெற்றிருக்கும் ஜப்பானியர்களுக்கே கற்பிப்பதிலும் ஆய்வுக்கு வழிகாட்டுவதிலும் கோலோச்சி வரும் அறிஞர்களின் தகவல்களைத் திரட்டத் தொடங்கியது. இவர்களுக்கெனத் தனி வலைத்தளமோ அதிகாரபூர்வமான பட்டியலோ இல்லாத நிலையில் நண்பர்களைத் தொடர்புகொண்டு ஒவ்வொருவரும் அவரவருக்குத் தெரிந்தவர்களை அறிமுகப்படுத்தக் கேட்டு ஒவ்வொருவரின் விவரங்களும் சேகரிக்கப்பட்டன. தெரிந்தவர்களிடமெல்லாம் கேட்டறிந்த பின்னரும் இன்னும் சில அறிவியலாளர்கள் விடுபட்டிருப்பதை அறிந்த பேரவை நிர்வாகிகள் மிகவும் மனம் வருந்தினர். அவர்களை அடுத்த அறிவியல் நாள் நிகழ்வில் உரியவாறு பாராட்ட முடிவு செய்தது.

பேரவையின் செயல்பாடுகள் அனைத்தும் அடுத்த தலைமுறையைக் கருத்தில் கொண்டே அமைபவை. தமிழ்நாட்டிலிருந்து ஓர் அறிவியலாளர் ஜப்பானுக்கு வருகை தருவதென்பது அரிதிலும் அரிதாக நிகழக்கூடியது. அந்நிகழ்வு ஜப்பானில் வளரும் அடுத்த தலைமுறைக்கும் பயனுள்ளதாக இருக்கவேண்டும் எனப் பேரவை முடிவுசெய்து கலந்துரையாடல் நிகழ்ச்சியைத் திட்டமிட்டது. இதற்காகத் தோக்கியோவிலுள்ள இரு இந்தியப் பள்ளிகளை அணுகி மாணவர்களை அனுப்புமாறு கோரியது. தமிழ் அறிவியலாளர் பங்கேற்றுத் தமிழில் நடக்கும் நிகழ்வில் தமிழ் மாணவர்கள் மட்டுமே பங்கேற்க முன்வருவார்கள் என்று எண்ணியிருந்தனர் நிர்வாகிகள். ஆனால், விண்வெளித் தொழில்நுட்பத்தில் பிற மாநில மாணவர்களும் ஆர்வம் காட்டுவதாகவும் அவர்களையும் அனுமதிக்க இயலுமா எனவும் இரு பள்ளிகளும் வேண்டுகோள் விடுத்தன. எனவே, கலந்துரையாடல் நிகழ்ச்சியை மட்டும் இருமொழி நிகழ்வாக மாற்றியது பேரவை. தமிழில் கேள்விகள் கேட்பவருக்குத் தமிழிலும் ஆங்கிலத்தில் கேட்போருக்கு ஆங்கிலத்தில் பதிலளிக்கவும் ஒப்புக்கொண்டார் நம் சிறப்பு விருந்தினர்.

பாரதி ஊர்வலமும் தமிழ் அறிவியலாளர்களுக்கு நடந்த பாராட்டும் பங்கேற்பாளர்களாலும் பார்வையாளர்களாலும் வெகுவாக விதந்தோதப்பட்டது பேரவையின் தலைமைக் கிளையையும் ஜப்பான் கிளையையும் நெகிழச் செய்தது. இத்தகைய திட்டமிடல்களுக்குப் பின்புலமாக அமையப் புரவலர்களும் அவசியம். இந்த நிகழ்ச்சியைப் பற்றி விளக்கிப் பொருளுதவி கேட்டுப் பேரவை அணுகிய முதல் புரவலர்

தோக்கியோவில் வெற்றிகரமான தொழிலதிபராகவும் மனிதநேயம் மிக்கவராகவும் விளங்கும் திரு. குறிஞ்சிசெல்வன் அவர்கள். ஸ்ரீபாலாஜி தென்னிந்திய உணவகம் என்ற பெயரில் இரு உணவகங்களை நடத்தி வருபவர். தமிழ் உணர்வு மிக்க இவர் நிகழ்ச்சியைப் பற்றிக் கேட்டதும் மிகுந்த உற்சாகத்துடன் உதவ ஒப்புக்கொண்டார்.




தோக்கியோ பே பன்னாட்டுப் பள்ளி (Tokyo Bay International School - TBIS) ஜப்பானில் தமிழ்க் குழந்தைகளுக்குச் சிறப்பான கல்வியை அளித்துவரும் பள்ளி. இதன் தாளாளர் திரு. ஜாகிர் அவர்கள் பேரவையின் நலம் நாடுபவரும் எழுத்தாளருமான திரு. ரா. செந்தில்குமார் அவர்கள் வழி அறிமுகமாகி நிகழ்ச்சிக்குப் பொருளுதவி செய்ய முன்வந்தார். சிறப்பு விருந்தினர் முனைவர் மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் TBIS பள்ளிக் குழந்தைகளிடம் அறிவியல் மனப்பான்மையை வளர்க்க ஓர் உரையை நிகழ்த்தவும் அன்னாரது ஒப்புதலுடன் பேரவை இசைவளித்தது.

தோக்கியோவிலுள்ள இஸ்கான் ஆலயத்துடன் இணைந்த சைவ உணவகம் கோவிந்தாஸ். இதன் உரிமையாளர் திரு. ஹரிநாராயணன் அவர்களிடம் பொருளுதவி கோரியபோது மகிழ்வுடன் உதவினார். இவர்கள் தவிரத் தனி நபர்களாக உதவவும் ஏராளமான நண்பர்கள் முன்வந்தனர். திரு. கு. கோவிந்தராஜன், திரு. ரா. செந்தில்குமார், திரு. விஜய் மோகன், திரு. கணேஷ் ஏழுமலை, திரு. சுரேஷ் ஜானகிராமன், திரு. செந்தில் விநாயகம் ஆகிய நண்பர்கள் காலத்தால் செய்த உதவி நிகழ்ச்சி வெற்றியடையப் பெரிதும் உதவியது.

சிறப்பு விருந்தினர்களுக்கான விசா, பயணச்சீட்டுகள், தங்குமிடம் முன்பதிவு என ஏற்பாடுகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்க, விழாவின்போது மேற்கொள்ளவேண்டிய பணிகளுக்கான தன்னார்வலர்களை ஒருங்கிணைத்தல், சிற்றுண்டி ஏற்பாடு, பாரதி ஊர்வலத்தில் பங்கேற்ற குழந்தைகளுக்கான சான்றிதழ்கள் மற்றும் நூல்கள், அறிவியலாளர்களுக்கான பதக்கங்கள் மற்றும் அறிமுகவுரைகள் என இன்னொரு பக்கம் இணையாகத் தயாரிப்புகள் தொடர்ந்து கொண்டிருந்தன. எல்லா ஏற்பாடுகளும் நிறைவுக் கட்டத்தை அடையத் தொடங்க, விழா நாளும் நெருங்கி வந்தது.

நவம்பர் 28ம் தேதி இரவு சென்னையிலிருந்தும் பெங்களூரிலிருந்தும் புறப்பட்ட சிறப்பு விருந்தினர்கள் 29ம் தேதி மதியம் தோக்கியோவின் நரித்தா விமான நிலையத்தை வந்தடைந்தனர். பேரவையின் ஜப்பான்கிளைத் தலைவர் திரு. வே. கிருஷ்ணசாமி அவர்களும் ஆலோசகர் திரு. ச. கமலக்கண்ணன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களை விமான நிலையத்தில் வரவேற்று அவர்களை அழைத்துக்கொண்டு விடுதிக்கு வந்து சிறு ஓய்வுக்குப் பின்னர் இரவு உணவுக்காகப் புறப்பட்டனர். இந்நிகழ்வுக்காகப் பொருளுதவி செய்த புரவலர்களுக்குச் சிறப்பு விருந்தினர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பை ஏற்படுத்த ஸ்ரீபாலாஜி தென்னிந்திய உணவகத்தில் இரவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எப்போதும் விருந்தோம்பலில் தமது தனித்துவமான கைவண்ணத்தைக் காட்டி விருந்தினர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துவிடும் திரு. குறிஞ்சிசெல்வன் அவர்கள் இப்போதும் அசத்தத் தவறவில்லை. பயணக் களைப்பு நீங்க

*இரவு ஓய்வெடுத்த சிறப்பு விருந்தினர்கள் இருவரும் அடுத்தநாள் காலை விழாவுக்காகத் தயாராகத் தொடங்கினர்.*
*முதல் நிகழ்ச்சியாக பாரதி ஊர்வலம் தொடங்கியது. ஃபுனாபொரி குழந்தைகள் பூங்காவில் குழந்தைகளும் பெற்றோர்களும் குழுமத் தொடங்கினர். நண்பர்கள் திரு. பார்த்தசாரதி அவர்களும் திரு. முத்து அவர்களும் ஊர்வலத்தை ஒருங்கிணைத்தனர். பாரதி ஜோதிக்கு மாற்றாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாரதி புகைப்படத்தைத் திரு. கு. கோவிந்தராஜன் தயாரித்துக் கொண்டு வந்திருந்தார். அன்பென்னும் கொட்டு முரசு தோக்கியோ வீதிகளில் ஒலிக்க ஸ்ரீபாலாஜி தென்னிந்திய உணவகத்தின் திரு. குறிஞ்சிசெல்வன் அவர்களின் துணைவியார் முனைவர் விஜயலட்சுமி இராஜமாணிக்கம் அவர்கள் முன்வரிசையில் பாரதி வேடமணிந்த இரு குழந்தைகளிடத்தில் புகைப்படத்தைத் தந்து ஊர்வலத்தைத் தொடங்கி வைத்தார். இரண்டிரண்டு பேராக வரிசையமைத்து வர, அரங்கை நோக்கி ஊர்வலம் நகர்ந்தது. வழியில் அதைக் கண்ணுற்ற ஜப்பானியர்கள் புகைப்படத்தில் இருப்பவரைக் குறித்து அறிந்துகொள்ள முற்பட, ஜப்பானிய மொழியறிந்த பெற்றோர்கள் அவர்களுக்கு பாரதியைப் பற்றி விளக்கினர்.*

*நண்பர் திரு. சுந்தரகணபதி அவர்கள் ஊர்வலத்தைப் பல்வேறு கோணங்களில் தனது புகைப்படக் கருவியில் சிறைப்படுத்தினார். சுமார் 25 நிமிடங்களுக்குப் பிறகு ஊர்வலம் அரங்கை வந்தடைய, நண்பர் முனைவர் ஆசைத்தம்பி அவர்களால் விடுதியிலிருந்து அழைத்து வரப்பட்டிருந்த சிறப்பு விருந்தினர்களும் அவர்களை வரவேற்கத் தரைத்தளத்தில் தயாரானார்கள்.*

*இந்த இடைப்பட்ட நேரத்தில் இரண்டாம் தளத்திலிருந்த அரங்கம் நிகழ்வுக்காகத் தயாரானது. ஒலிவாங்கி, இணைய இணைப்பு, வண்ண விளக்குகள் ஆகியவற்றை நண்பர் திரு. செந்தில் விநாயகம் அவர்கள் சரிபார்க்க, ஒளிப்பெருக்கியை மடிக்கணினியுடன் நண்பர் திரு. விஜய் மோகன் அவர்கள் இணைக்க, இணையவழி இணையும் பேரவையின் தலைவருடனான ஜூம் இணைப்பைத் தோழி திருமிகு. விஜயலட்சுமி தாமோதரன் அவர்கள் உறுதிப்படுத்த, யூடியூப் சேனல் வழி நேரலையை நண்பர் திரு. அ. கோவிந்தபாசம் அவர்கள் தொடங்கிவைக்க, ஊர்வலத்தை வரவேற்கத் தரைத்தளத்துக்குச் சென்றிருந்த சிறப்பு விருந்தினர்களும் பார்வையாளர்களும் அரங்குக்கு வந்து சேர்ந்தனர். நிகழ்வைப் புகைப்படமெடுக்க அமர்த்தப்பட்டிருந்த தொழில்முறைப் புகைப்படக் கலைஞர் திருமிகு சிந்தியா ராஜன் அவர்களும் ஒளிப்படமெடுக்கக் கேட்டுக்கொள்ளப்பட்ட திரு. சாய் ஸ்ரீதர் அவர்களும் தம் பணிகளில் மூழ்க, தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்வின் முதல் அமர்வான பாரதிவிழா தொடங்கியது. திருமிகு. பெட்சி அவர்கள் இணைப்புரை நிகழ்த்தினார்.*

*பேரவையின் ஜப்பான் கிளையின் ஆலோசகர் திரு. ச. கமலக்கண்ணன் அவர்கள் நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். பேரவையின் நிறுவுனர் திரு. த. ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் விழாவின் நோக்கத்தையும் பேரவையின் செயல்பாடுகளைப் பற்றியும் எடுத்துரைத்துச் சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்தினார். இருவரின் சிறப்புகளையும் தனித்தன்மைகளையும் கூறி எப்படி இந்நிகழ்வுக்குப் பொருத்தமானவர்கள் என விளக்கினார். அறிமுகப் படுத்தப்பட்ட சிறப்பு விருந்தினர்களை வரவேற்கப் பேரவையின் ஜப்பான்கிளை ஒரு கொள்கையை வரையறுத்திருக்கிறது. ஜப்பானிலிருக்கும் எல்லாத் தமிழ் அமைப்புகளையும் நட்பு*

அமைப்புகளாகக் கருதி அவற்றின் பிரதிநிதிகளை அழைத்துச் சிறப்பு விருந்தினர்களுக்குப் பூங்கொத்தும் நினைவுப்பரிசும் வழங்கி வரவேற்பதுதான் அது. அதன்படி தோக்கியோ தமிழ்ச்சங்கத்தின் சார்பாகத் திரு. ச. கௌரிசங்கர், சப்பான் தமிழ்ச்சங்கத்தின் சார்பாகத் திரு. சே. சதீசுகுமார், மருதம் தமிழ்க்குழுவின் சார்பாகத் திரு. பழனிகுமார், JTPEN சார்பாகப் பேராசிரியர் கணேசபாண்டியன் ஆகியோர் பேராசிரியர் ய. மணிகண்டன் அவர்களை வரவேற்க, வெளிநாடுவாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பாகத் திரு. வி. குன்றாளன், துளிக்கனவு இலக்கிய வட்டத்தின் சார்பாகத் திரு. ரா. செந்தில்குமார், ஜப்பான் தமிழ் ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பாகத் திரு. அ. கோவிந்தபாசம் ஆகியோர் முனைவர் மயில்சாமி அண்ணாதுரை அவர்களை வரவேற்றனர்.

அதைத் தொடர்ந்து இந்நிகழ்வுக்காகவே படைக்கப்பட்ட "**பாரதியும் ஜப்பானும்**" நூல் வெளியிடப்பட்டது.




தமிழாய்ந்த அறிவியல் அறிஞர் மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் வெளியிட, முதல்படியை யார் பெற்றுக்கொண்டால் பாரதிக்குத் தகும் என்று யோசித்தபோது பேரவையினரின் நினைவுக்கு வந்தவர்கள் இருவர். எட்டையபுரத்திலிருந்து கூப்பிடு தொலைவிலிருக்கும் ஊரில் பிறந்து ஜப்பானில் தனது இல்லத்துக்கு "பாரதி இல்லம்" என்றே பெயர் சூட்டியிருக்கும் திரு. கு. கோவிந்தராஜன் அவர்களும் நவீன இலக்கிய உலகில் தவிர்க்கவியலாத ஆளுமையாக விளங்கிவரும் எழுத்தாளர் திரு. ரா. செந்தில்குமார் அவர்களும்தான் முதல்படியைப் பெற்றவர்கள். இருவரும் பாரதியை ஊன்றிப் படித்து உள்வாங்கியவர்கள். முந்தைய பாரதிவிழாவில் பாரதியின் அறியப்படாத பரிமாணங்களைச் சிறப்பாக விளக்கிச் சொற்பொழிவாற்றிய இருபெரும் ஆளுமைகள் ஆவர்.

பாரதிவிழாவின் முத்தாய்ப்பாகப் பேராசிரியர் ய. மணிகண்டன் அவர்களின் உரை அமைந்தது. பாரதி குறித்த தனது ஆய்வனுபவங்களில் தொடங்கி ஜப்பான் குறித்து பாரதி தனது கட்டுரைகளிலும் தலையங்கங்களிலும் குறிப்பிட்டிருந்த தகவல்களை எடுத்துரைத்து, பாரதியின் பாடல்களில் காணப்படும் பிற கோட்பாடுகளான சமத்துவச் சிந்தனை, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, பாரதியின் படைப்புக்கும் வாழ்வுக்கும் இடையே வேறுபாடின்மை, பாரதிதாசனுடனான உறவு போன்றவற்றைச் சுவையாகத் தொகுத்து உரையாற்றியதால் 30 நிமிடங்கள் திட்டமிடப்பட்டிருந்த உரை பார்வையாளர்கள் பாரதியச் சிந்தனைகளில் மூழ்கி மெய்மறந்து நேரத்தைக் கவனிக்கத் தவறியதால் 45 நிமிடங்களுக்கும் மேலாக நீண்டது.

தொடர்ந்து பாரதி ஊர்வலத்தில் பங்கேற்ற குழந்தைகளுக்குச் சான்றிதழ்களையும் பாரதி குறித்த நூல் ஒன்றையும் பரிசளித்துப் பேராசிரியர் அவர்கள் ஒவ்வொரு குடும்பத்துடனும் புகைப்படம் எடுத்துக்கொண்டார். திருமிகு. திவ்யபிரபா அவர்களும் திருமிகு. விஜயப்பிரியா அவர்களும் சான்றிதழ்களையும் நூல்களையும் வரிசைப்படுத்தி உதவினர்.

அடுத்த நிகழ்வான அறிவியல்நாள் நிகழ்வு தொடங்குமுன் பார்வையாளர்களுக்குச் சிற்றுண்டியும் தேநீரும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எஸ்கே கிச்சன் உணவு சேவையை நடத்திவரும் திருமிகு. சுஜி ஜெயக்குமார் மற்றும் திருமிகு. கார்த்தீஸ்வரி அஜித்குமார் ஆகியோர் சுவையான மெதுவடையையும் ஏலக்காய்த் தேநீரையும் தயாரித்து அளித்திருந்தனர். நண்பர்கள் திரு. சு.வெ.சதீஷ்குமார் அவர்களும் திரு. கார்த்திகேயன் அவர்களும் அவற்றை அரங்குக்குக் கொணர உதவினர். இடைவேளைக்குச் சற்று முன்னர் சிற்றுண்டி வழங்கும் இடத்தைப் பார்வையிட்ட நண்பர் திரு. குறிஞ்சிசெல்வன் அவர்கள் எதிர்பாராத விதமாகப் பார்வையாளர்கள் வருகை அதிகரித்ததால் ஒருவேளை சிற்றுண்டி போதாமல் போய்விட்டால் என்ன செய்வது எனக் கருதிக் கூடுதலாக சமோசாக்களை வரவழைத்திருந்தார். பாரதியைச் செவிமடுத்து முடிந்தபின் வயிற்றுக்கும் சிறிது ஈந்துவிட்டு மீண்டும் விண்வெளிச் செவிக்குணவைப் பெற அரங்குக்குத் திரும்பினர்.

இரண்டாம் அமர்வின் முதல் நிகழ்வாகப் புரவலர்களுக்குச் சிறப்புச் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து ஜப்பான்வாழ் தமிழ் அறிவியலாளர்களுக்கான பாராட்டுவிழா தொடங்கியது. ஒவ்வொருவரின் பிறப்பிடம் தொடங்கிக் கல்விப் பின்புலம், ஆய்வுப் பொருண்மைகள், பணியாற்றிய கல்வி நிறுவனங்கள், நாடுகள், பதிப்பித்த ஆய்வுக்கட்டுரைகள், தற்போதைய பணி விவரங்கள் போன்றவற்றைப் பேரவை சேகரித்து வைத்திருந்தது. அவற்றைத் தொகுத்துச் சுருக்கமான அறிமுகவுரையாகப் பேரவையின் ஆலோசகர் திரு. ச. கமலக்கண்ணன் உருவாக்கித் தர, சென்னையைச் சேர்ந்த செய்தி வாசிப்பாளரும் தொலைக்காட்சி நிகழ்ச்சி நெறியாள்கையாளரும் தொழில்முறை நிகழ்ச்சி அறிவிப்பாளருமான திருமிகு. திவ்யா நாதன் அவர்கள் தெளிவான தமிழ் உச்சரிப்புடன் கூடிய தனது தேன்மதுரக் குரலால் ஒவ்வொருவரின் அறிமுகவுரையையும் குரல்பதிவாக்கித் தந்தார்.

ஒவ்வோர் அறிவியலாளரும் தாம் முனைவர் பட்டம் பெற்ற கால வரிசைப்படி குடும்பத்துடன் மேடைக்கு அழைக்கப்பட்டு அவர்களைப் பற்றிய அறிமுகவுரை பின்னணியில் ஒலிக்க, அவர்களின் பெயரும் புகைப்படமும் முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பும் பொறிக்கப்பட்ட பாராட்டுமடல் சிறப்பு விருந்தினர் முனைவர் மயில்சாமி அண்ணாதுரை அவர்களால் வழங்கப்பட்டது. இந்தப் பாராட்டு மடலை ஈரோட்டிலிருந்து திரு. புஷ்பராஜ் அவர்கள் பேரவையின் தலைவரின் வழிகாட்டுதலின் பேரில் உருவாக்கி ஜப்பானுக்கு அனுப்பியிருந்தார். தங்களது கடின உழைப்பு அங்கீகரிக்கப்பட்ட மகிழ்ச்சிப் பெருக்குடன் அறிவியலாளர்கள் தத்தம் குடும்பத்தினருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். ஒவ்வொருவரைப் பற்றிய அறிமுகவுரை கீழ்க்கண்டவாறு அமைந்தது.



**முனைவர் பாரதி சுப்ரமணியன்** அவர்கள் தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்தவர். வேதியியலில் ஆழ்வார்குறிச்சி ஸ்ரீபரமகல்யாணி கல்லூரியில் இளநிலைப் பட்டத்தையும் காரைக்குடி மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் முதுநிலை மற்றும் முனைவர் பட்டங்களையும் பெற்றார். பின்னர் இஸ்ரேலின் ஹீப்ரூ பல்கலையிலும் ஜப்பானின் நகோயா பல்கலையிலும் முதுமுனைவர் ஆய்வு வழிகாட்டியாகப் பணியாற்றினார். தனது கண்டுபிடிப்புகளுக்காக ஜப்பானில் 7 காப்புரிமைகளையும் இந்தியாவில் ஒரு காப்புரிமையையும் பெற்றிருக்கும் இவர் 40க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைப் பல்வேறு பன்னாட்டு ஆய்விதழ்களிலும் கருத்தரங்குகளிலும் படைத்துள்ளார். ஜப்பானின் வசேதா பல்கலையில் 7 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். தற்போது கியோத்தோவில் ஒரு தனியார் நிறுவனத்தில் நீரியல் தொடர்பான ஆய்வறிஞராகப் பணியாற்றி வருகிறார். மின்வேதியியல் துறைக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.



1. **முனைவர் குமரவேல் திருமணஞ்சேரி** அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர். இயற்பியலில் புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் இளநிலைப் பட்டத்தையும் திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரியில் முதுநிலைப் பட்டத்தையும் பாரதிதாசன் பல்கலையில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் நிறைவு செய்த இவர் சென்னைப் பல்கலையில் தனது முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டார். ஜப்பானின் ட்சுகுபாவில் மேம்பட்ட தொழில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தில் முதுமுனைவர் ஆய்வு வழிகாட்டியாகப் பணியாற்றிய இவர் 60க்கும் மேற்பட்ட ஆய்வேடுகளைப் பல்வேறு பன்னாட்டு ஆய்விதழ்களில் பதிப்பித்திருக்கிறார். நிஹோனியம் என்ற புதிய தனிமத்தைக் கண்டறிந்த ஜப்பானிய அரசு நிறுவனமான ரிக்கென் அறிவியல் மையத்தில் முதுநிலை அறிவியலாளராகப் பணியாற்றிவரும் இவரது அறிவியல் பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.



2. **முனைவர் விஜயலட்சுமி இராஜமாணிக்கம்** அவர்கள் திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். சென்னை இராணி மேரிக் கல்லூரியில் இளநிலை வேதியியல் பட்டத்தையும் வேலூர் முத்துரங்கம் அரசு கலைக்கல்லூரியில் முதுநிலைப் பட்டத்தையும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இயல்வேதியியல் துறையில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் நிறைவுசெய்த இவர் சென்னை மத்தியத் தோல் ஆராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். டி.என்.ஏ மரபணுக்களுடன் குரோமியம் 3 கூட்டணுக்களின் இடையீடு குறித்து ஆய்வு செய்த இவர் சுவீடனின் கரோலின்ஸ்கா, அமெரிக்காவின் மிச்சிகன் மருத்துவக் கல்லூரி, ஓசகா பல்கலைக்கழகங்களில் முதுமுனைவர் ஆய்வு வழிகாட்டியாகவும் பணியாற்றியுள்ளார். பெல்ஜியம், சுவீடன், இந்தியா போன்ற நாடுகளில் நடைபெற்ற கருத்தரங்குகளில் ஆய்வுக்கட்டுரைகள் வழங்கியது மட்டுமல்லாமல் பத்துக்கும் மேற்பட்ட வேதியியல் ஆய்வேடுகளையும் பதிப்பித்துள்ளார். சிறந்த அறிவியல் ஆய்வறிஞராக மட்டுமல்லாமல் ஜப்பானில் வெற்றிகரமான தொழிலதிபராகவும் வலம் வரும் இவரது சாதனைகளைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.

3. **முனைவர் கண்மணி கந்தசாமி** அவர்கள் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். சென்னை ஸ்டெல்லா மேரிக் கல்லூரியிலும் சென்னைப் பல்கலையிலும் பட்டப்படிப்பை முடித்த இவர் ஜப்பானின் நகோயா பல்கலையில் முனைவர் பட்ட ஆய்வை நிறைவு செய்தார். சிறிது காலம் இந்தியாவில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தில் பணிபுரிந்த இவர் பின்னர் நகோயா பல்கலையிலும் தோக்கியோவின் ஐக்கிய நாடுகள் பல்கலையிலும் பணிபுரிந்தார். 35 நாடுகளுக்குத் தனியாகச் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு கருத்தரங்குகளில் கலந்துகொண்ட இவர் தோக்கியோவில் ஈழத் தமிழ் அகதிகளுக்கான உதவி மையத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றியது மட்டுமின்றி 2004ல் இலங்கையை சுனாமி தாக்கியபோது அங்கு மீட்புப்பணிகளை மேற்கொண்ட ஜப்பானின் ஜைக்கா நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றினார். விளையாட்டிலும் ஆர்வம் கொண்ட இவர் தமிழ்நாடு மகளிர் கைப்பந்து அணியில் இடம்பெற்றது மட்டுமின்றிச் சென்னையில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியின் துவக்கவிழாவில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்தித் தேசியக் கொடியை ஏந்தி அணிவகுப்பில் பங்கேற்றார். 1994ம் ஆண்டு அப்போதைய முதல்வர் ஜெ.ஜெயலலிதா அமைத்த முதல் தமிழ்ப்பெண்களின் எவரெஸ்ட் மலையேற்றக் குழுவில் இடம்பெற்றது இவரது சாதனைகளில் ஒன்று. இவர் ஜப்பானியத் தொலைக்காட்சிகளின்வழி ஜப்பானியர்களுக்கு அறிமுகமான தமிழ் முகம். இவரது சமூகப் பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.





4. **முனைவர் சிவபாலன் ஆறுமுகம்** அவர்கள் புதுச்சேரியைச் சேர்ந்தவர். சென்னை அண்ணா பல்கலையிலும் பாண்டிச்சேரி பல்கலையிலும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பிரிவில் தொழில்நுட்பப் பட்டப்படிப்புகளை முடித்த இவர் கான்பூர் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தில் கம்பியில்லாத் தகவல் தொடர்பு குறித்த முனைவர் பட்ட ஆய்வை நிறைவு செய்தார். பெங்களூரிலுள்ள மோட்டோரோலா ஆராய்ச்சி நிலையத்தில் முதுமுனைவர் ஆய்வு வழிகாட்டியாகப் பணியாற்றிய இவர் 5ஜி தகவல் பாதுகாப்பு குறித்து இதுவரை விண்ணப்பித்த 103 கண்டுபிடிப்புகளில் 28 காப்புரிமைகளைப் பெற்றுள்ளார். 50க்கும் மேற்பட்ட ஆய்வேடுகளைப் படைத்ததும் 100க்கும் மேற்பட்ட கருத்தரங்குகளில் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரைகள் வாசித்ததும் மட்டுமின்றி 2050க்கு அப்பால் தகவல் பாதுகாப்பு என்ற நூலின் ஒரு பகுதியையும் இயற்றியுள்ளார். தற்போது ஜப்பானில் ரக்குதென் மொபைல் நிறுவனத்தின் தகவல் பாதுகாப்புத் தொழில்நுட்பப் பிரிவின் மேலாளராகப் பணியாற்றி வருகிறார். தகவல் பாதுகாப்புத் துறைக்கு இவரது பங்களிப்பை அங்கீகரித்து இம்மடல் வழங்கப்படுகிறது.

5. **முனைவர் வெண்மதி மாறன் பாலு அழகர்** அவர்கள் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் விலங்கியலில் இளநிலை, முதுநிலைப் பட்டப்படிப்புகளையும் அண்ணாமலைப் பல்கலையில் ஆய்வியல் நிறைஞர் படிப்பையும் முடித்த இவர் ஜப்பானின் ஹிரோஷிமா பல்கலையில் கடல்சார் அறிவியல் துறையில் முனைவர் பட்ட ஆய்வை முடித்து அங்கேயே முதுமுனைவர் ஆய்வு வழிகாட்டியாகவும் பணிபுரிந்தார். மலேசியா, கொரியா, ஜப்பான் நாடுகளில் சுமார் 20 ஆண்டுகளாக ஆசிரியப்பணியில் இருக்கும் இவர் பன்னாட்டு ஆய்விதழ்களில் 100க்கும் மேற்பட்ட ஆய்வேடுகளையும் 50க்கும் மேற்பட்ட பன்னாட்டுக் கருத்தரங்குகளில் ஆய்வுக்கட்டுரைகளையும் படைத்து ள்ளார். இவரது அறிவியல் பணியைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.





6. **முனைவர் செல்வகுமார் செல்லையன்** அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். தஞ்சாவூர் பூண்டி புஷ்பம் கல்லூரியில் இயற்பியலில் இளநிலையும் சென்னை மாநிலக் கல்லூரியில் முதுநிலையும் சென்னைப் பல்கலையில் அணுக்கருவியலில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் பெற்ற இவர் அங்கேயே இயற்பியலில் முனைவர் பட்டத்தையும் நிறைவு செய்தார். சென்னைப் பல்கலை மட்டுமின்றி ஆஸ்திரேலியாவின் தேசியப் பல்கலைக்கழகம், அணுக்கருவியல் தொழில்நுட்பக் கழகம், ஜப்பானின் அணு ஆற்றல் முகவாண்மை, ட்சுக்குபா பல்கலை ஆகியவற்றில் முதுமுனைவர் ஆய்வு வழிகாட்டியாகவும் பணியாற்றியுள்ளார். 51 ஆய்வேடுகளிலும் 48 பன்னாட்டுக் கருத்தரங்குகளிலும் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ள இவர் தற்போது ஜப்பானின் ட்சுக்குபா பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். பாசிட்ரான் அறிவியல் துறைக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.

7. **முனைவர் ஆசைத்தம்பி மாணிக்கம்** அவர்கள் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். மகாராஷ்டிராவின் கோலாப்பூர் விவசாயக் கல்லூரியில் இளநிலைப் பட்டமும் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலையில் முதுநிலைப் பட்டமும் பெற்று ஜப்பானின் தோக்கியோ வேளாண் தொழில்நுட்பப் பல்கலையில் முனைவர் பட்டம் பெற்றார். ஜப்பானியர்களுடன் இணைந்து விவசாயத்தில் பூச்சியியல் தொடர்பாகப் பல்வேறு ஆய்வேடுகளைப் படைத்துள்ள இவர் இந்தியாவிலும் ஜப்பானிலும் பல கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார். பின்னர் கனடா நாட்டின் மெக்-கில் பல்கலையில் வணிக மேலாண்மையில் முதுநிலைப் பட்டமும் பெற்றுள்ள இவர் தற்போது ஜப்பானில் சொந்தமாக நிறுவனத்தைத் தொடங்கி அதன்மூலம் இந்தியாவில் வணிகத்தை விரிவுபடுத்த விரும்பும் ஜப்பானிய வேளாண் நிறுவனங்களுக்கும் ஜப்பானில் வணிகத்தை விரிவுபடுத்த விரும்பும் இந்திய வேளாண் நிறுவனங்களுக்கும் ஆலோசனைகளை வழங்கி வருகிறார். இந்திய ஜப்பானிய நிறுவனங்களுக்கிடையில் பல்வேறு தொழில்நுட்பங்களைப் பரிமாறிக்கொள்ளவும் இந்தியாவிலுள்ள தனது நிறுவனத்தின் மூலம் பன்னாட்டு நிறுவனங்கள் வேளாண் ஆராய்ச்சியை வெற்றிகரமாகச் செய்யவும் உதவி புரியும் இவரது வேளாண் பணிகளைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.





8. **முனைவர் மனோகரன்** அவர்கள் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். கோவை குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரியில் மின்னணுவியலில் இளநிலைப் பட்டமும் கான்பூர் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தில் முதுநிலைப் பட்டமும் பெற்ற இவர் ஜப்பானின் தோக்கியோ தொழில்நுட்பக் கழகத்தில் இயல் மின்னணுவியல் தொடர்புத் துறையில் முனைவர் பட்டத்தைப் பெற்றார். 18 ஆண்டுகள் ஆசிரியப்பணி அனுபவம் கொண்டவர். மின்னணுவியலில் சென்சார் எனப்படும் உணரிகள் தொடர்பான 7 காப்புரிமைகளைப் பெற்றுள்ளார். இவை மட்டுமின்றி, 100க்கும் மேற்பட்ட ஆய்வேடுகளைப் படைத்தும் 200க்கும் மேற்பட்ட பன்னாட்டுக் கருத்தரங்குகளில் பங்குபெற்றும் தற்போது ஜப்பானிய நிறுவனம் ஒன்றில் மூத்த ஆய்வாளராகப் பணியாற்றிவரும் இவரது அறிவியல் பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.

9. **பேராசிரியர் கணேசபாண்டியன்** அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் உயிர்வேதியியலில் இளநிலையும் உயிரித்தொழில்நுட்பத்தில் முதுநிலைப் பட்டமும் பெற்ற இவர் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் சென்னையில் தொடங்கிய முனைவர் பட்ட ஆய்வை நிறைவு செய்ய ஜப்பானின் நீகத்தா பல்கலைக்கு ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் அழைக்கப்பட்டார். கியோத்தோ பல்கலையில் தற்போது இணைப் பேராசிரியராகவும் முதன்மை ஆய்வறிஞராகவும் பணியாற்றும் இவர் சுவிட்சர்லாந்தின் ஜூரிக் பல்கலை, அமெரிக்காவின் ரட்கெர்ஸ் பல்கலை ஆகியவற்றில் வருகைதரு பேராசிரியராகவும் மட்டுமின்றி ரெகுஜீன் எனும் நிறுவனத்தின் அறிவியல் ஆலோசகராகவும் திகழ்கிறார். 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியப்பணி ஆற்றிவரும் இவர் இரண்டு துணைப் பேராசிரியர்கள், 15 முதுமுனைவர் ஆய்வு வழிகாட்டிகள், 18 முனைவர் பட்ட ஆய்வர்கள், 25 இளநிலை மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர். கியோத்தோ பல்கலையில் இயங்கிவரும் ஆரோக்கியமான முதுமைக்கான ஆய்வகத்தின் இயக்குநராகவும் உள்ளார். ஹாங்காங் மருத்துவ அறிவியல் நிறுவனத்தின் இளம் அறிவியலாளர் விருது முதல் இந்திய அரசின் சிறந்த ஆய்வறிஞர் விருது வரை பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள இவர் மரபணு ஆராய்ச்சி தொடர்பான 4 காப்புரிமைகளைப் பெற்றுள்ளது மட்டுமின்றிப் பல்வேறு ஆய்விதழ்களில் 118 ஆய்வுக்கட்டுரைகளைப் படைத்துள்ளார். உயிர் அறிவியலுக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.





10. **முனைவர் வைஜெயந்தி தங்கவேல்** அவர்கள் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். குடியாத்தம் திருமகள் கலைக்கல்லூரியில் வேதியியலில் இளநிலைப் பட்டமும் வேலூர் முத்துரங்கம் கலை அறிவியல் கல்லூரியில் முதுநிலைப் பட்டமும் பெற்ற இவர் சென்னை மாநிலக் கல்லூரியில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் சென்னையில் முனைவர் பட்டத்தையும் பெற்றார். பின்னர் அமெரிக்காவின் ஜார்ஜியா தொழில்நுட்பக் கழகத்திலும் ஜப்பானின் நீகத்தா பல்கலையிலும் முதுமுனைவர் ஆய்வு வழிகாட்டியாகப் பணியாற்றினார். குபோத்தா அறக்கட்டளை விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்ற இவர் கியோத்தோ பல்கலையில் அறிவியலாளராகப் பணியாற்றுவது மட்டுமின்றி ரெகுஜீன் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாகவும் உள்ளார். உயிர் வேதியியல் துறையில் 3 காப்புரிமைகளைப் பெற்றுள்ளார். பன்னாட்டு ஆய்விதழ்களில் 18 ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். மருந்தியல் துறைக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.

11. **முனைவர் கவிதா முத்து சுபாஷ்** அவர்கள் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர். மதுரை லேடி டோக் கல்லூரியில் கணினி அறிவியலில் இளநிலையும் முதுநிலையும் பெற்ற இவர் ஹிரோஷிமா பல்கலையில் தகவல் தொழில்நுட்பப் பிரிவில் முனைவர் பட்ட ஆய்வை நிறைவு செய்தார். பின்னர் தென்கொரியாவில் சியோல் தேசியப் பல்கலை உள்ளிட்ட மூன்று பல்கலைகளில் முதுமுனைவர் ஆய்வு வழிகாட்டியாகப் பணிபுரிந்த இவர் ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி பல்கலைக்கழகங்கள், இந்தியாவின் வேலூர் தொழில்நுட்பக் கழகம் ஆகியவற்றில் உதவிப் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். மருத்துவம் சார்ந்த செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் 4 காப்புரிமைகளைப் பெற்றுள்ளார். பன்னாட்டு ஆய்விதழ்களில் 67 ஆய்வுக்கட்டுரைகளைப் படைத்துள்ளார். தகவல் தொழில்நுட்பத்துறையின் செயற்கை நுண்ணறிவுப் பிரிவிற்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.





*12. **முனைவர் கணேஷ் ஏழுமலை** அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவர் வேதியியலில் திருவள்ளுவர் பல்கலையில் இளநிலைப் பட்டத்தையும் வேலூர் தொழில்நுட்பக் கழகத்தில் முதுநிலைப் பட்டத்தையும் ஜப்பானின் ஹொக்காய்தோ பல்கலையில் மின்வேதியியல் துறையில் முனைவர் பட்டத்தையும் பெற்றார். இந்தியாவில் எரிகலன் தொழில்நுட்ப மையத்தில் ஆய்வறிஞராகப் பணியாற்றிய பின்னர் ஜப்பானின் தேசியப் பொருண்ம அறிவியல் நிறுவனத்திலும் ட்சுக்குபா பல்கலையிலும் முதுமுனைவர் ஆய்வு வழிகாட்டியாகப் பணியாற்றினார். தற்போது ஜப்பானில் வினையூக்கி நிறுவனம் ஒன்றில் முதுநிலை ஆய்வாளராகப் பணியாற்றி வரும் இவர் 2 காப்புரிமைகளையும் பெற்றுள்ளார். 20க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைப் பல்வேறு பன்னாட்டு ஆய்விதழ்களில் வெளியிட்டுள்ள இவர் இரண்டு அறிவியல் நூல்களையும் எழுதியுள்ளார். மின்வேதியியல் துறைக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.*

*13. **முனைவர் சண்முகவேல் சின்னத்தம்பி** அவர்கள் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். கடலூர் பெரியார் கலைக்கல்லூரியில் இயற்பியலில் இளநிலைப் பட்டமும் சென்னைப் பல்கலையின் கிண்டி வளாகத்தில் படிகவியல் மற்றும் உயிர் இயற்பியலில் முதுநிலைப் பட்டமும் பெற்றார். சென்னை அண்ணா பல்கலையில் மருத்துவ இயற்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்ற இவர் ஜப்பானின் தேசியப் பொருண்ம அறிவியல் நிறுவனத்திற்குப் பின்னர் தற்போது கியோத்தோ பல்கலையில் முதுமுனைவர் ஆய்வு வழிகாட்டியாகப் பணியாற்றுகிறார். மருந்தியல் ஆய்வு தொடர்பான 52 ஆய்வுக்கட்டுரைகளைப் பல்வேறு பன்னாட்டு ஆய்விதழ்களில் வெளியிட்டுள்ளார். உயிர் இயற்பியல் துறைக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.*





*14. **முனைவர் வடிவேல்** அவர்கள் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். சேலம் மகேந்திரா பொறியியல் கல்லூரியில் இயந்திரவியலில் இளநிலைப் பட்டமும் சென்னை அண்ணா பல்கலையில் உற்பத்தியியல் துறையில் முதுநிலைப் பட்டமும் பெற்ற இவர் சென்னை சத்தியபாமா பல்கலையில் மென்பொருளைப் பயன்படுத்தி உற்பத்தித் துறையை மேம்படுத்துவது குறித்து முனைவர் பட்டம் பெற்றார். தற்போது ஜப்பானில் டாடாவின் மென்பொருள் நிறுவனத்தில் பணியாற்றி வரும் இவர் மும்பை இந்தியத் தொழில்நுட்பக் கழகத்திலும் சென்னை அண்ணா பல்கலையிலும் நடைபெற்ற உற்பத்தித்துறை சார்ந்த பன்னாட்டுக் கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார். உற்பத்தித் துறைக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.*

15. **முனைவர் பாலசுப்ரமணியன் ருக்மிணிகிருஷ்ணன்** அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்தவர். வேதியியலில் திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரியில் இளநிலைப் பட்டத்தையும் தேசியக் கல்லூரியில் முதுநிலைப் பட்டத்தையும் நிறைவு செய்த இவர் சென்னை அண்ணா பல்கலையில் தனது முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டார். அப்போது பல்கலைக்கழக மானியக்குழுவின் அறிவியலாளர்களுக்கான இரண்டு உயரிய விருதுகளைப் பெற்றார். தனது கண்டுபிடிப்புகளுக்காக 5 காப்புரிமைகளைப் பெற்றுள்ள இவர் 39 ஆய்வுக்கட்டுரைகளைப் பல்வேறு அறிவியல் இதழ்களில் பதிப்பித்துள்ளார். தென்கொரியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளைத் தொடர்ந்து ஜப்பானின் தேசியப் பொருண்ம அறிவியல் நிறுவனத்தில் முதுமுனைவர் ஆய்வு வழிகாட்டியாகப் பணியாற்றிவரும் இவரது அறிவியல் பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.





16. **முனைவர் காந்திமதி மோகராசன்** அவர்கள் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். திருப்பூர் பார்க் கல்லூரியில் கணினிப் பயன்பாடுகளில் இளநிலைப் பட்டமும் கோயம்புத்தூர் தொழில்நுட்பக் கல்லூரியில் கணினித் தொழில்நுட்பத்தில் முதுநிலைப் பட்டமும் பெற்ற இவர் ஜப்பான் உயர்தர அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் மருத்துவப் பதிவுகளிலிருந்து தகவல் சேகரிப்பு தொடர்பாக முனைவர் பட்டம் பெற்றுள்ளார். இத்துறை சார்ந்த பல்வேறு பன்னாட்டு ஆய்விதழ்களில் 4 ஆய்வுக்கட்டுரைகளையும் பதிப்பித்துள்ளார். மருத்துவ ஆய்வுலகுக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.

17. **முனைவர் ஹம்சலேகா நஞ்சையன்** அவர்கள் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். கோவை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் தகவல் தொழில்நுட்பவியலில் இளநிலையும் கோவை ஸ்ரீகிருஷ்ணா தொழில்நுட்பக் கல்லூரியில் கணினித் தொழில்நுட்பத்தில் முதுநிலைப் பட்டமும் பெற்ற இவர் பாரதியார் பல்கலையில் முனைவர் பட்டம் பெற்றார். இத்துறை சார்ந்த பல்வேறு பன்னாட்டு ஆய்விதழ்களில் 8 ஆய்வுக்கட்டுரைகளையும் பதிப்பித்துள்ளார். கணிப்பொறியியல் ஆய்வுலகுக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.





18. **முனைவர் மு.கருப்பசாமி** அவர்கள் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர். வேதியியலில் மதுரை காமராசர் பல்கலையில் இளநிலைப் பட்டமும் தஞ்சாவூர் சாஸ்திரா நிகர்நிலைப் பல்கலையில் முதுநிலை மற்றும் முனைவர் பட்டமும் பெற்றார். தற்போது ஓசகா பல்கலையில் முதுமுனைவர் ஆய்வை மேற்கொண்டிருக்கும் இவர் பல்வேறு பன்னாட்டு ஆய்விதழ்களில் 22 ஆய்வுக்கட்டுரைகளைப் பதிப்பித்துள்ளார். கரிம வேதியியல் துறைக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.

19\. **முனைவர் பிருந்தா** அவர்கள் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். புரதத் தொழில்நுட்பத்திலும் தடுப்பூசி தொடர்பாகவும் கோவை வேளாண் பல்கலையில் இளநிலைப் பட்டமும் கர்நாடகாவின் தார்வாடு வேளாண் பல்கலையில் முதுநிலைப் பட்டமும் பெற்ற இவர் ஜப்பானின் தோக்கியோ வேளாண் தொழில்நுட்பப் பல்கலையில் முனைவர் பட்டம் பெற்றார். அங்கேயே தற்போது உதவிப் பேராசிரியராகவும் பணிபுரிந்து வருகிறார். 3 ஆண்டுகள் ஆசிரியப்பணி அனுபவமும் 8 ஆண்டுகள் மூலக்கூறு உயிரியலில் ஆய்வு அனுபவமும் பெற்ற இவர் 13 பன்னாட்டுக் கருத்தரங்குகளில் பங்கேற்றது மட்டுமின்றிப் பல்வேறு ஆய்விதழ்களில் 12 ஆய்வுக்கட்டுரைகளையும் பதிப்பித்துள்ளார். வேளாண் துறைக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.





20\. **முனைவர் வசந்தி பழனிச்சாமி** அவர்கள் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். வேதியியலில் சேலம் கைலாஷ் மகளிர் கல்லூரியில் இளநிலைப் பட்டமும் கோவை பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரியில் முதுநிலைப் பட்டமும் பெற்ற இவர் சென்னை எஸ்.ஆர்.எம் பல்கலையில் மருந்தியல் தொடர்பாக வேதியியலில் முனைவர் பட்டம் பெற்றார். மருந்தியல் தொடர்பாகப் பல்வேறு பன்னாட்டு ஆய்விதழ்களில் 10க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைப் பதிப்பித்துள்ள இவர் தனது கண்டுபிடிப்புக்கான ஒரு காப்புரிமையையும் பெற்றுள்ளார். தற்போது ஜப்பானின் மெய்ஜி மருந்தியல் பல்கலையில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றிவரும் இவரது ஆய்வுலகப் பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.

21\. **முனைவர் ஜோயல் தாம்சன்** அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர். இயந்திரவியலில் கோவை பாரதியார் பல்கலையில் இளநிலைப் பட்டமும் சென்னைப் பல்கலையில் முதுநிலைப் பட்டமும் பெற்ற இவர் ஜப்பானின் கெய்யோ பல்கலையில் கணினி அறிவியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றார். பன்னாட்டு ஆய்விதழ்களில் இரு ஆய்வுக்கட்டுரைகளைப் பதிப்பித்துள்ள இவர் தற்போது ஜப்பானில் டாடா கன்சல்டன்சி நிறுவனத்தில் செயற்கை நுண்ணறிவுப் பிரிவின் துறைத்தலைவராகப் பணியாற்றி வருகிறார். செயற்கை நுண்ணறிவுத் துறைக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.





22\. **முனைவர் ராஜலட்சுமி பாலசுப்ரமணியன்** அவர்கள் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். நுண்ணுயிரியியலில் விருதுநகர் வன்னியப்பெருமாள் கல்லூரியில் இளநிலைப் பட்டத்தையும் மதுரை மதுரா கல்லூரியில் முதுநிலைப் பட்டத்தையும் விருதுநகர் இந்து நாடார் கல்லூரியில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் பெற்ற இவர் ஜப்பானின் தோக்கியோ தொழில்நுட்பக் கழகத்தில் மரபியல் துறையில் முனைவர் பட்டத்தைப் பெற்றுள்ளார். இத்துறை தொடர்பான பன்னாட்டு ஆய்விதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளைப் பதிப்பித்துள்ள இவர் தற்போது தோக்காய் பல்கலையின் மருந்தியல் துறையில் முதுமுனைவர் ஆய்வை மேற்கொண்டிருக்கிறார். மரபியல் துறைக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.

23. **முனைவர் ராஜ்குமார் சின்னசாமி** அவர்கள் பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். சென்னை ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்புத் துறையில் இளநிலைப் பட்டமும் திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலையில் நானோ தொழில்நுட்பத்தில் முதுநிலைப் பட்டமும் உத்திரப் பிரதேசத்தின் அலகாபாத் பல்கலையில் ஒளிமின்னணுவியல் தொடர்பாக முனைவர் பட்டமும் பெற்றார். பெரம்பலூர் தந்தை ஹான்ஸ் ரோவர் பொறியியல் கல்லூரியில் உதவிப் பேராசிரியராகவும் ஹைதராபாத் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தில் ஆய்வறிஞராகவும் பணியாற்றிய இவர் தற்போது ஜப்பானில் ஒசகாவின் சான்கென் ஆய்வு நிறுவனத்தில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். ஒளிவேதியியல் தொடர்பான பல்வேறு ஆய்விதழ்களில் 15 ஆய்வுக்கட்டுரைகளைப் பதிப்பித்தும் 17 பன்னாட்டுக் கருத்தரங்குகளில் பங்கேற்றும் அறிவியலுக்குப் பங்களித்துள்ள இவரைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.





24. **முனைவர் லோகேஸ்வரன் இரவிச்சந்திரன்** அவர்கள் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். புதுச்சேரி மத்தியப் பல்கலையில் வேதியியலில் இளநிலையும் முதுநிலையும் முடித்த இவர் சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தில் உலோகவியலில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். ஜப்பானின் கியோத்தோ பல்கலையில் முதுமுனைவர் ஆய்வு செய்துவரும் இவர் பல்வேறு பன்னாட்டு ஆய்விதழ்களில் 8 ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். வேதியியல் துறைக்கு இவரது பங்களிப்பைப் பாராட்டி இம்மடல் வழங்கப்படுகிறது.

வரவேற்புரையில் குறிப்பிட்டிருந்தபடி இந்த 25 பேரில் 17 பேர் முதல்தலைமுறைப் பட்டதாரிகள். 19 பேர் அரசு அல்லது உதவிபெறும் பள்ளி கல்லூரிகளில் பயின்றவர்கள். அதிலும் யாருமே மாநிலத் தலைநகரான சென்னையில் பிறந்து வளர்ந்தவர்கள் கிடையாது. மாவட்டத் தலைநகரங்களிலிருந்து வந்திருந்தவர்களும் குறைவு. பெரும்பாலானவர்கள் திருப்பத்தூர், வேலூர், விருதுநகர், நாகப்பட்டினம், தூத்துக்குடி போன்ற வளரும் மாவட்டங்களின் கிராமப்புறங்களிலிருந்து வந்திருந்தவர்கள். அத்தகைய எளிய பின்னணியிலிருந்து வந்து உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாக ஜப்பானியர்களுக்கே வழிகாட்டும் நிலைக்கு உயர்ந்தவர்கள்.

இத்தகைய தகுதி வாய்ந்தவர்களுக்குப் பாராட்டுமடல் வழங்கிய மகிழ்வுடன் முனைவர் மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் தனது அறிவியல் நாள் சிறப்புரையைத் தொடங்கினார். தமது இளமைப் பருவம், அறிவியலில் ஆர்வம், கல்லூரிப் படிப்பு, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் பணிக்குச் சேர்ந்து படிப்படியாக உயர்ந்தமை, சக அறிவியலாளர்கள், ஏவுகணைத் தொழில்நுட்பம், செயற்கைக்கோளை ஏவும்போது எதிர்கொண்ட சிக்கல்கள், அவற்றுக்குத் தீர்வுகண்ட விதம் என ஒவ்வொன்றாக விளக்கித் தெளிவான முன் தயாரிப்புடன் கூடிய உரையை நிகழ்த்தியபோது பார்வையாளர்கள் மந்திரத்தால் கட்டுண்டவர்கள்போல் வேறு நினைவின்றிச் செவிமடுத்துக் கொண்டிருந்தனர்.

நிகழ்ச்சியின் இறுதிப் பகுதியும் அடுத்த தலைமுறை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த நிகழ்வுமான அறிவியல் கலந்துரையாடல் தொடங்கியது. அதில் தோக்கியோவிலுள்ள Global Indian International School (GIIS) மற்றும் Indian International School of Japan (IISJ) ஆகிய இந்தியப் பள்ளிகள் பரிந்துரைத்திருந்த மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் மட்டுமல்லாது பார்வையாளர்களும் அவர்தம் குழந்தைகளும்கூடக் கலந்துரையாட ஆர்வம் காட்டினர்.



நண்பர்கள் முனைவர் ஆசைத்தம்பி அவர்களும் முனைவர் கண்மணி கந்தசாமி அவர்களும் உரையாடலை நெறியாள்கை செய்து உதவினர். அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசு நாடுகளும் செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவிக்கொண்டிருக்கின்றன. ஆனால் அவர்களைக் காட்டிலும் மிகக்குறைந்த செலவில் இந்தியாவால் செயற்கைக்கோள்கள் தயாரிக்க முடிகிறது. எப்படி இது சாத்தியமாயிற்று? வல்லரசுகளின் செயற்கைக் கோள்களில் இல்லாத மூலப்பொருள் அப்படி என்ன இந்தியச் செயற்கைக்கோள்களில் இருக்கிறது என்ற ஒரு மாணவரின் வினாவுக்குச் சிறப்பு விருந்தினர் அவர்கள் "இந்திய மூளை" என்று பதிலளித்ததும் அரங்கில் கரவொலி அடங்கச் சற்று நேரம் பிடித்தது. ஒவ்வொருவரின் கையிலும் அமுதசுரபியை வைத்திருந்ததுபோல் கணக்கின்றிக் கேள்விகள் பெருக்கெடுக்க, அரங்கைத் திரும்ப ஒப்படைக்க வேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. எனவே, மீதமிருக்கும் கேள்விகளை அரங்குக்கு வெளியே கேட்டுக்கொள்ளலாம் என அறிவித்துப் பேரவையின் தலைவர் திரு. வே. கிருஷ்ணசாமி அவர்கள் நன்றியுரை நவின்றார். நாட்டுப்பண்ணுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தாலும் மீதமிருந்த கேள்விகள் அரங்குக்கு வெளியே தொடர்ந்து கொண்டிருந்தன. கொட்டும் குளிரையும் பொருட்படுத்தாது பார்வையாளர்கள் வெளிப்படுத்திய அறிவியல் ஆர்வம் சிறப்பு விருந்தினர்களையும் கட்டிப்போட்டது. பின்னர் கட்டிடத்தை மூடும் நேரம் என்று வாயிற்காவலர் வந்து நினைவுறுத்திய பிறகுதான் நின்றுகொண்டே ஒருமணி நேரத்துக்கும் மேல் உரையாடிக் கொண்டிருந்தது அனைவருக்கும் நினைவுக்கு வந்தது.

இலக்கியமும் அறிவியலும் தமிழரின் வளர்ச்சிக்கு இரு கண்கள் என்ற கூற்றை மெய்ப்பிக்கும் விதமாக மக்கள் சிந்தனைப் பேரவையின் ஜப்பான் கிளை இந்நிகழ்வை வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டியது ஜப்பான் மண்ணில் மேலும் இதுபோன்ற தமிழர்களுக்குப் பயன்படும் நிகழ்ச்சிகளை நிறைய நடத்தவேண்டும் என்ற உந்துதலை விதைத்ததாக நண்பர்கள் கூறியது உண்மையிலேயே நெகிழ வைத்தது.

CATHAY PACIFIC

KIC TRAVEL

HAPPY PONGAL

# TIME TO TRAVEL CHENNAI

## CATHAY PACIFIC AIRLINES

## EXCLUSIVE DEALS

## ROUND TRIP TICKET TO CHENNAI

## LOCK YOUR FARE

# JUST ¥89,000~~

SUBJECT TO SEAT AVAILABILITY



LIMITED TIME OFFER

## BOOK NOW

*!HANDLING CHARGES APPLICABLE!*

**FOR BOOKING CONTACT**



080-3491-4426 070-1252-8050 080-8385-5550

kumar@kictravel.jp



03-6868-5545




# TBIS

EMPOWERING STUDENTS TO BE SUCCESSFUL GLOBAL CITIZENS

## Collaborations



MOU with JAA
for Japanese High School and
College program



MOU with SRM Public School, India
for Educational,Cultural and Student
Exchange program

# உழவன் வீட்டுக் கவிதை

இராஜலக்ஷ்மி சந்திரசேகரன்

உழவன் ஒருவன் உரைத்தான்
உன்னதமான தன் மனையாளிடம்
நான் வெறும் விவசாயி
கவிதைகளில் ஈர்க்கப்படாதவன்
கடின உழைப்பாளி என்று !
காந்தனை நோக்கியவள்
காதலோடே மொழிந்தாள் ...
தக்க தருணத்தில்
வானுக்கும் மழைக்கும்
காற்றுக்கும் வெயிலுக்கும்
விதைத்த விதைகளின்
அறுவடை பலனுக்கும்
ஒவ்வொரு மாடுக்கும் ஆடுக்கும்
அதன் கன்றுக்கும்
குட்டிகளுக்கும்
சேவலுக்கும் கோழிக்கும்
அது மட்டுமா.,இன்ன பிற
செடி கொடிகளுக்கும்
எல்லாவற்றிற்கும்
பெயரிடும் போதும்..
உழைப்புதான் கடவுள் என்று
உழைத்துக் கொண்டே இருக்கும்
தெய்வம் தொழாத நீங்கள்..
நித்தமும் நன்றிப் பெருக்கில் !
தினமுமே தலை வணங்குதல்
பார்த்திருக்கிறேன், இயற்கைக்கு..
கவிஞர்களின் வாழ்வான
கவிதையைத் தான்
வாழ்க்கை என்றே
வாழ்கிறீர்கள்..
நீங்களாவது வெறும்
விவசாயி ஆவது..
ஒப்புக் கொள்கிறான் உழவன்..
துணையை அணைத்து
அது சரி ,உன்னோடு சேர்ந்த
கவிதையும் அழகு தான் ! ஈர்த்து
விட்டாயே !
தனக்கும்
தைப் பொங்கலுக்கும்
மட்டும் அல்ல
தினம் தோறும்
தரணி முழுவதற்கும்
அன்னம் ஆக்குபவன்!
தலைவன் நீ தான் என்றால்
தாயுமானவள்



ஓவியம்: ChatGPT



*கோயம்புத்தூரில் பிறந்து வளர்ந்தவர்.ஆங்கில இலக்கியத்திலும் செய்தி தொடர்பியலிலும் இளங்கலை முதுகலை தேர்ச்சி. தமிழ் மொழியின் மீதும் கவிதைகள் மீதும் ஆர்வம் கொண்டவர். 2023 நவம்பர் மாதம் துவங்கிய ஜப்பான் மக்கள் சிந்தனைப் பேரவையின் துணைத்தலைவராக பொறுப்பேற்று, 2023 டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த பாரதி விழாவினை தொகுத்து வழங்கியவர். பொங்கல் மலருக்குத் தொடர்ச்சியாக கவிதை வழங்கி வருபவர்.*

# கனத்த சிறகுகள்

காணக் கிடைக்காத
பெரும் இன்பம்
இவர்கள் சிரிக்கையில்
தாங்கொணாத
பெரும் துன்பம்
இவர்கள் அழுகையில்
வெகுண்டு எழும்
பெரும் கோபம்
இவர்கள் பிடிவாதத்தில்
பயம் கொள்ளச் செய்யும்
பெரும் பதட்டம்
இவர்கள் சாகசத்தில்
என்னவென்றே
எடுத்துச் சொல்ல
முடியாத உணர்வும் உண்டு

இவர்கள் மௌனித்து
மொழியாமல்
வார்த்தைகளை மென்றும்
விழுங்கியும்
சிந்தனையுள் சிதைந்து
கிடக்கையில்
பெற்ற பிள்ளைகளின்
கண் மணிகளில் ,கணம் தோறும்
காண்கிறோம் ., உணர்வெனும்
கடவுளை.
இவர்கள் ..
நம்மை இயக்கும்
நமது கனத்த
சிறகுகள்

# தியானி

பாதுகாப்பாக பயணிக்கிறேன்
என்னுள் நான்
யாரும் புலம்பெயராத
பூங்காவனமாக
பூத்துக் கிடக்கிறது ...
பழக்கப்படாத பாதை தான்
பயப்படாது பயணிக்கிறேன்
புதையுண்டு கிடக்கும்
பெட்டகம் தேடி.
அண்டம் முழுதுமாக
என்னுள் அகப்பட்டு

ஆழமான அமைதியில் எனது
ஆன்மாவுடனான
உரையாடல்.
கடலை நோக்கிய நதியென
என்னுள்ளே பயணித்து
எனை நான் தேட
அதிசய அவனியுள்
ரகசிய மர்மங்கள்
உண்மையை உரக்கச்
சொல்கிறது,
உயிர் வாழ, வளர,
**உன்னை நீ உணர்.**




# SunWells connects you with global companies in Japan

- **A total of 1,000 Engineers belong to SunWells Japan and working in Japanese MNC companies.**
- **SunWells shall place you the Fortune 500 companies in Japan based on your career goal.**
- **SunWells shall provide you the Visa, Accommodation, Living Support, etc.**

**WE PROVIDE YOU A COMPLETE COMFORT TO ELEVATE YOUR CAREER, WE EDUCATE Japanese language AND OTHER PROGRAMS AS learning and development.**

## GLOBAL NETWORK

JAPAN ( Yokohama, Tokyo, Utsunomiya, Shizuoka, Nagoya, Osaka, Hiroshima, Fukuoka )
INDIA (Chennai) USA (Texas) Singapore Vietnam (Hanoi)

**SunWell Solutions Co., Ltd.**
Head Office
2F Yokohama Yomiuri Building, 51-1 Yamashita-chou, Naka-ku, Yokohama JAPAN
Tel: 045-222-3384 Contact: recruit@sunwells.com

SunWells
Let Your Potential Shine

# GALICIA series provided by BRI

## ~Asset formation from small funds~

## 3 Benefits of Real Estate Investment

**Merit 01**

### Asset Formation



- ✓ Post-purchase payments are covered by rental income
- ✓ Favorable to an inflationary economy

**Merit 02**

### tax reduction



- ✓ Reduction of affiliation tax and resident tax
- ✓ Valuation at the time of inheritance is lower than financial assets

**Merit 03**

### Pension & Insurance



- ✓ Rental income after retirement
- ✓ Death benefit effect of mortgage loan
- ✓ Optional Loans with Medical Coverage

- **Our investment properties are patronized by many Indian customer.**
- **Free simulation document creation!**
- **BRI Group can provide comprehensive management services!**
- ***If you have permanent residency, we have many affiliated financial institutions that we can introduce to you.***



### LOCATION

82 buildings in total*23 wards of Tokyo

*The number of buildings as of January 2025.



### FACILITY

- Free Wi-Fi
- Free Internet
- Auto-lock system
- Security camera
- Parcel delivery box etc.

BRI GROUP

**BRI Inc.**
7-18-18 Roppongi, Minato-ku, Tokyo Sumitomo Real Estate Roppongi Dori Building 4F
For telephone enquiries please contact:
090-6936-8445 (contact person: Oya)

Free consultation

# Photo Glimpses 2024



மேடை அலங்காரம்




அறுசுவை பொங்கல் விருந்து




இறை வணக்கம்




கிராமியக்கலைகள்



பரத நாட்டியம்




நீலாவின் நடனம்



மாகோராஜாவின் சுந்தரிகள்

# Photo Glimpses 2024



நாட்டியாஞ்சலி



தேநீர் இடைவேளை



ராக்குகோ ஜப்பானிய கதை சொல்லல்




சர வெடி நடனம்



மெல்லிசை விருந்து



நடனம்

# Photo Glimpses 2024



நடனத்தில் கலக்கிய ஸ்டைலிஷ் தமிழச்சிகள்




நடனம்



மெல்லிசை





தொகுப்பாளர்கள் ப்ரநீத் மற்றும் கவிதா



ஜகனே தந்திரம்



பார்வையாளர்களுடன் தாமி



மலர் வெளியீடு



ரசித்து மகிழும் தோக்கியோ வாழ் தமிழர்கள்

# Photo Glimpses 2024



ஹம்ஸத்வனி இசைக்குழு




பிங்கோ பரிசு



பிங்கோ பரிசு




ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்

# Devil's Smile

Prasanna Krishnan

An alarm went off. It was as if the alarm was ringing at a distance in some dream. Then she realized it was ringing near her. Her eyes were groggy when she woke up. She realized she was lying in her sofa. She switched off the alarm. She was lying there with a pillow tucked under her head and her favorite bed sheet on top of her. A screensaver was running in the smart TV that hung in the hall. A faint glow of sunlight was trying to steal its way into the hall from the kitchen window. The hall windows had been closed shut and curtain closed. It was strange. She always liked to leave the windows open for the night to get the breeze in. Also, she preferred the sunlight to welcome her into the day.

She made an effort to slowly sit up. That's when she realized she was only wearing purple negligee. It seemed new. Also, she could not recollect when she fell asleep yesterday in her negligee not even bothering to put on her usual nightwear. She slowly stood up. Her body pained. She started walking towards the kitchen to get some water. She felt thirsty enough to tear through a bottle of water. When she stepped near the entrance of the kitchen she felt a sharp pain in her arm, as if it was burning. She shrieked and stepped back. The burning sensation stopped. She noticed a dark stain in her negligee. She stepped forward again and her body started burning. She immediately traced back her steps and sat down on the sofa. This could not be happening. She knew what this was. She picked up the lower end of her negligee and smelt the stained portion.

There was a flash of light. She was able to visualize what had happened yesterday. She saw someone running. He had his hand on the left side of his neck and was running. He slipped and fell face forward and hit his head on the edge of a table. To her shock she saw Kedar's face. She jerked back to reality. What was happening? She stood up and went towards her bedroom. The table she saw in her vision was her bedroom. It had a reading table also which was unlikely for a typical bedroom, but hers was a makeshift bedroom.

She entered her bedroom. There was no one. Everything was as she had left it. She heaved a sigh of relief and was about to turn to leave when she noticed a patch of the carpet was discolored. The patch was big enough to hold a young lad. She shivered. She sat down and bent her neck to smell the carpet area. The discolored spots smelt like recently washed with some chemical. She slowly stood up and went to her almirah and opened the door cautiously. Everything was as it should be inside the almirah.

She then looked up at the attic. From the darkness of the attic, a face was looking straight at her and smiling. It was a creepy face. The smile made her shiver and also she wanted to cry out loud. But instead, she smiled back. Her body was not listening to her brain. It was as if someone else had taken control of her. She then started walking towards the hall. She went straight to the hall sofa and moved it aside using one arm. Wait a minute! Was she that strong?



Prasanna - a skilled author of both captivating short stories and immersive novels. This multi-talented person doesn't just weave tales but also dabbles in the art world, displaying prowess as an artist. Don't be surprised if you catch them melodiously humming tunes while in the bathroom, showcasing their secret passion for singing. Beyond these artistic endeavors, they navigate the IT professional realm, leveraging their tech expertise. And when the day winds down, you'll find this individual delving into the world of movies, showcasing an undying love for cinema across genres.

She then quickly removed the carpet from the floor. The trapdoor became visible. Wait! When was a trapdoor in the house? She opened the trapdoor in haste. Her brain was saying not to do it, but she was doing it.

She saw a body facedown lying below the trapdoor. She lifted the body out of the depth and put it in the hall floor. She turned the face. It was indeed Kedar. Her neck was filled with blood. His left hand looked as if it was holding his neck. She noticed that blood was still oozing through his neck. His face was in a state of shock. His white shirt was all stained, crumpled and shabby. She wanted to hug him and cry. She wanted to cry out loud at her loss. She was due to marry Kedar the next week. But somehow while her brain registered all these emotions, she was not crying. She did not step down to hug Kedar. To her own amazement, she walked to the nearest drawer and picked up a matchbox and a small bottle of kerosene. She came straight back to the body of Kedar and set his body on fire. Was she mad? Why did she do that? Why was she not able to act in a sane manner? It was as if she could not control her deeds.

The fire was engulfing Kedar’s body and portions of the building as well now. She turned and picked up a set of formal clothes, a ring and a bouquet and threw all of those into the fire. She then opened a large box which contained a marriage gown in white which must be very expensive. She threw that also into the fire. Her whole life and planned marriage were burning down in front of her eyes. Her brain was asking a thousand questions. Why was she doing this? How did Kedar die? Why did she burn him and all the marriage artifacts now? Had she really gone mad?

That’s when a shocking thought stuck her mind. Her attic had a mirror on the door! Did she see her face? She rushed to the mirror at the other end of the hall. That’s when she saw her face. It was the living example of a nightmare. Blood stains near a wide-open mouth and thin crooked eyes.

A sinister smile was permanent on her face. She looked like the Devil incarnate.

A long chorus howl was heard. The Wolves knew she was near.



# Quit or Lost a Job

**Matheswaran Narayanasamy**

*Losing or quitting a job can be a challenging experience, especially when financial stability becomes an immediate concern. Japan has fairly defined steps to take as soon as you face a job loss. They do help you reduce the financial burden to a certain level. Read further to understand how to deal with unemployment, health insurance, resident tax, retirement etc.*

---

***Reasons for Job Loss***

- *Job loss may result from **personal choice (自己都合)**, often for better opportunities or **company decision (会社都合)** such as layoffs or restructuring.*
- *The reason for job loss impacts how quickly unemployment benefits begin:*
    1. ***Personal choice:** Benefits typically start after a two-month waiting period.*
    2. ***Company decision:** Benefits start sooner, providing quick financial relief.*

---

***Claiming Unemployment Insurance***

- *Fortunately, every salaried worker pays into **unemployment insurance (雇用保険)** (as part of paycheck deduction). Many do not pay attention to this while employed. While you begin your search for a next job, avail benefits of this unemployment insurance ● Key steps to access benefits:*
    1. *Visit the nearest **Hello Work** office to apply for benefits.*
    2. *Get a **daily basic allowance**, calculated based on age and previous salary.*
    3. *Example: A 45-year-old earning ¥600,000/month (gross) may receive ¥777,150 over 90 days, paid in installments.*
- *Additional benefits:*
    1. ***Reemployment Allowance (再就職手当):** Secure a new job early with more than two-thirds of your benefit days remaining, receive 70% of remaining allowance.*
    2. ***Skill Development Refunds (教育訓練給付):** Partial refunds for eligible certification or training courses during unemployment.*

---



Mathu is from Erode/Tamilnadu. Living 23 years in Japan, currently in Kasai area. Happy to help people especially who are new to Japan answer questions on daily life and local systems like home loan, tax system and saving options, retirement, investing etc.

https://www.linkedin.com/in/matheshjp/

**Health Insurance Options**

● Losing a job means losing membership in your employer’s health insurance plan. You have three options:

1. **Continuation of Employer Health Insurance (任意継続):**

■ Apply within 20 days of job loss.

■ You pay both your and your employer's shares of the premium. ■ Often cheaper than National Health Insurance.

2. **National Health Insurance (国民健康保険):**

■ Apply within 14 days.

■ Covers all dependents but premiums are calculated based on the previous year’s income.

3. **Spouse’s Health Insurance (扶養に入る):**

■ Dependents can join a working spouse’s plan if eligible.

This is the best option for the unemployed but not available if receiving unemployment benefits above ¥3,612/day.

---

**Resident Tax Responsibilities**

● 住民税 **(Resident Tax)** is based on the previous year’s income and remains payable even after job loss.

● Payment options depend on when you became unemployed:

○ **January–May:** Remaining tax is deducted in full from the final salary.

○ **June–December:** You can choose to pay in installments or as a lump sum later. ● Proactive planning is essential to payments, especially with reduced income.

---

**Retirement Contributions**

● When you lose a job, switch to 国民年金 **(National Pension)** to maintain retirement contributions at a fixed rate (currently ¥16,980/month).

● Dependent spouses must also enroll and pay the premium.

● Waivers or payment delays are possible. Apply at your local ward office.

---

**Filing a Final Tax Return (確定申告)**

● If you remain unemployed for the rest of the year, file a final tax return between February 16 and March 15. Claim refunds for overpaid income taxes due to reduced earnings.

● For severance or retirement pay (退職金), taxes are handled by the employer at a reduced rate. Reclaim excess if the employer deducted a flat 20.42% tax.

---

**Key Japanese Terms**

● **雇用保険被保険者証:** Proof of unemployment insurance contributions.

● **離職票:** Document from your employer required to apply for unemployment benefits.

● **健康保険の資格喪失証明書:** Certification that your employer-sponsored health insurance has ended.

● **退職証明書:** Proof of resignation needed for switching health insurance or pension types.

**Final Note**

● Employment also means a lot of things like Taxes, Retirement, Health Insurance, are automatically taken care when your employer credits salary to your bank account every month. Unemployment forces you to handle them all by yourself. It will require significant time and effort to do them, especially with your job search at the same time as top priority. Getting a new job quickly is a big relief.

**Enjoy all of my writings from here:** https://tinyurl.com/mathujapan

# Japanese Temari Ball


Amisha Sarviya

IG- TemaribyAmisha


Temari, literally meaning “ball made by hand”, is a traditional art that embodies cultural traits such as attention to details, beauty in simplicity and disciplined mastering of art. Temari Balls were originally made from old kimono swatches by mothers for children to play. In today’s world, the art is cherished as a decorative piece in a wide array of displays; as a Christmas Tree ornament, Hina Matsuri decorations, gifts for weddings and happy occasions. Due to its interesting themes and intricate patterns it never fails to stand out as a unique statement of style and art.

To give a brief explanation about how a temari ball is made:

